மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

கடவுள்துணை.

# அரிச்சந்திர வெண்பா.

இஃது

பச்சையப்பமுதலியார் கல்விச்சாலையில்

தமிழ்த்தலைமைப் புலமை நடாத்தும்

ம-ள-ள-ஸ்ரீ

திருமயிலை - முருகேசமுதலியா ரவர்களால்

பரிசோதித்து

அரன்வாயில்

வெங்கடாசலமுதலியாரால்

சென்னை

அஷ்டலக்ஷ்மீவிலாச அச்சுக்கூடத்தில்

௧௮௮௪ - ௵ ஜனவரி ௴

பதிப்பிக்கப்பட்டது.

(Copyright Registered)

PRICE ANNAS 4-விலை அணா ௪.

GF
C-1 IF:V
B4

உ

கடவுள் துணை.

# அரிச்சந்திர வெண்பா.

## பாயிரம்.

### காப்பு.

சங்கிரக மாக வரிச்சந் திரன்சரிதம்
பொங்குமுதற் பாவாற் புகலுதற்குத்—தங்கமுடி
யாறுடையா னம்பொ னடியிணைகள் பற்றுணையா
ஆறுடையா வெறகிவ குறும. (க)

### அவையடக்கம்.

கைத்தலங்க ளில்லான் கடைந்து பயோததியைப்
புத்தமிழ்தந் தானளித்தல் போனமணிற்சீர்—வைத்த
வரிச்சந் திரன்சரிதை யாய்ந்துணர்வோன் றலவேன்
பிரட்டிச் சொலுமிச் செயல். (க)

கற்றுணர்ந்த மேலோர் கருதார்க ளிந்நூலிற்
குற்றமுனை வேனு நிது கொளவாரா—பற்றுலகி
னெல்லுக் குமிபுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. (உ)

பாயிரம் முற்றிற்று. ஆ. ௩

## அரசாட்சிக்காண்டம்.

---

### க-வது நாட்டுச்சிறப்பு.

திங்கள் வழியுதித்த பாண்டவர்தஞ் சீர்நாடு
மங்கிழந்து சூதி லடவி நணணித்—தங்கவவட்
காலற் கடந்ததவ வன்னிவரக கண்டவனைக்
காவிறைஞ்சி நின்றார் கனிந்து. (க)

நின்றாருண் முன்னவனை நீத்தவன்வாழ்த் தாநோக்கிக்
குன்றாதி வெந்துயராற் கோமானே—யன்றாழி
னின்னினுந்தன் புறரா னிருபனரிச் சந்திரனென்
றன்னவறகிக காதைவிளவா றாய்ந்து. (உ)

அம்போ ருகசதனத் தன்னம்போ னுப்பொழிய
வமபோதி யாாந்தெழிலி நல்கமிழதம்—பம்போடி
வணசரயு வாயொழுக வான்பயிாளை கோசலமென்
றுணசிறபபி னோர்பொழிலிய குணடு. (௩)

தானந் துயர்ந்தன்ன தானந் தகைச்சுடர்க்குண்
ஞானத் தனிச்சுடரா ஞாலத்தே—நிதத
மாட்டறஞ்செய் வோர்செலவர் மன்னுமற வோரமரு
நாட்டிறகுட் கோசலமா நாடு. (௪)

ஓதலுறி னெண்பொருளா னெல்கா விளைவதனுற
காதலுறு மலைத்தாயக காய்பசிநோ—யீதிசளோ
டேசலுறும் பகுகுழுவின் நீர்புனலுங் கொண்டிலங்குங்
கோசலமாங் கோட்டங் குறித்து. (௫)

க-வது நாட்டுசசிறப்பு முற்றிற்று. ஆ அ.

---

### உ-வது நகரச்சிறப்பு.

வேலை நிகர்கிடங்கும் வேண்டார்க் கணுகரிய
கோல மிகுபொறியுங் கோட்டிமயம்—போலிடமூ
முன்னதமுந் திண்மையுமுற் றோங்குமதி லாற்பொலியு
நன்ன ரயோத்தி நகர். (க)

காந்தகவேல் வீரரொடு நற்றுரக நால்வாய்தேர்
சோர்ந்தணையத் தந்தந் திறையுய்ப்பான்—போந்த
முடியணியும் பல்வேந்தர் மொய்குழாந் துன்னுங்
கடிநகரக் கோபுரவாய்க் கண். (௨)

ஆரணமுன் னூற்பயில்வோ ரார்ப்பும் விழாவியமுங்
கூரணவும் வேல்விழியார் கூத்தொலியுங்—காரண்
கடையமுர சோலையன்றிக் காரளகர்ப பாடில்
கொடியமதிற் கோபுரமூ தூர். (௩)

மலர்ந்தமுகத் தின்சொல் வழங்கி யெவர்க்குங்
கலந்தவிருந் தேற்றயலான் காந்தை—நலம்வெறுத்துத்
தீங்குபுரிந் தாக்குநயஞ் செய்துநடு நின்றொழுகா
ராங்கிலழுக் காற்றை யறுத்து. (௪)

சந்த மலர்மணத்தாற் சார்ந்துமுரல் வண்டினத்துக்
குந்துமர மெல்லாந்தே னூட்டுதலாற—புந்திமிகு
மந்நகரத் தார்வளையா தன்னியநாட் டாதுலர்க்குப்
பொன்னளிப்ப வொன்றுபுகழ் வென். (௫)

வெற்புற்ற வாரநகில் வெண்டா மரையாளும்
பொற்புற்ற செங்கமலப் பொன்னுமல்லாற—கற்பற்றுப்
புல்லரையும் வீழ்ந்து புணருமவ ளொன்றென்று
மிலவொழுங்கு நலவார்கரு ளில். (௬)

எல்லார்க்கு மெண்ணு மெழுத்துமெனு மிவ்விரண்டா
மெல்லாரு நோக்குமியற் கேள்வியெனச்—சொல்லாருங்
காது மிருத்தலினாற் கண்ணில்லார் காதில்லா
ரோத வொருவரக்குண் டோ. (௭)

முப்புரிநூன் மார்பர் முதுமறையிற் செய்மகத்தி
னைப்புரையு மாளிகைசூ ழன்னமன்னூர்—செய்ப்புழிலம்
பாற்புலர்த்த விட்டவு ற பைம்புனையுங் கனைனூற்ற
மால்பயத்தி ஞேயெ யுவான். (௮)

துங்கவெள்ளிக் குன்றனைய தோரணமுறு மாளிகையி
னங்கணைத்தி லாடுமகார் வீசியகேழ் - பொங்குமணி
வீதிதொறு மென்று மிளிர்தலினா லப்பதியை
மீதிமையார் நோக்குவர்விண் ணோர். (௯)

ஓதப் பரந்து லகையு மறுசெழிலோ
ராதிச் சதுர்வருணத் தாரையணைஇ - நீதிபுரி
வான்றவனன் வங்கிசத்தான் வண்டார்த் திரிசங்கு
வான்றவனன் றீன்ற மகன். (௧௦)

கல்விப் பெருங்பரவைக் கங்குகண்டோ னொருவன்
சொல்லைப் புரிந்துநிகழ் சொல்லுவோ - னெல்லவர்க்கு
காட்சிக் கெளியன் சதனத்துப் பின்னிடையா
மாட்சிக் கடற்படையான் மன். (௧௧)

ஆறுகலை யில்லா னமர்ந்த முடிகளிடை
யாரொலொரு டங்குகொளவா னுண்மையுளான் - கூறுத்
தாயினைத் தணடிப்பான் முவா வறம்புரிவான்
வெய்களைவிட் டாய்வான் விரைந்து. (௧௨)

வாய்மைபகர் வாயான் மதியமைச்சர் கைப்புனையு
மேயமொடு கேட்கு நெடுஞ்செவியான் - மியுலவுங்
கற்றரநேர் கையான் கருமந் தரப்புயத்தா
னந்திலரு ணாட்டத்தா னல். (௧௩)

ஆமன்னர் கோமா னரிச்சந் திரனென்பான்
சீர்மன்னு மன்னன் சிரத்துமுடி - பேர்மன்ன
சோதிடங்கண் மாமறையோர் சொல்லக் கவிகாண
ரோதிடவு மங்கலத்தை யோர்ந்து. (௧௪)

தொல்லமைச்சர் முன்னோர் தொழுது பணிசெய்ப
மெல்லியலா ரெண்கவரி வீசவொளிர் - கல்லிழைத்த
சிங்கா தனத்தே செழுங்கவிகைக் கீழிருந்தான்
பொங்கா தவன்போற் பொலிந்து. (௧௫)

௨-வது நகரச்சிறப்பு முற்றிற்று ஆ. ௨௧.

அரசாட்சிக்காண்டம் முற்றிற்று.

## விவாககாண்டம்.

அக்காலைப் பற்றிகந்த வந்தணரத் தாணியின்கட்
புக்கா ருடனெழுந்த பூபாலன் - மிக்கார்தம்
பாதமலர் சூடிப் பகராசி பெற்றவர்க்கொள்
ளாதனமன் பிட்டிருத்தி யார்ந்து. (௧)

ஐந்துவியா வற்பகலு மானந்தத் தேன்பருகுஞ்
சந்த மறைமுனிவீர் சாற்றுமி - னந்தலுற
மெய்ப்பொழிலிற் சென்றடைந்தீ ரெப்புனித நீர்குடைந்தீ
ரெப்புதுமை கண்டீ ரியைந்து. (௨)

என்றுரைப்பக் கேட்டறவோ ரேமகிரி போல்வயனென்
னன்றிருக்குங் கன்னோசி நாடதனிற் - றுன்றரூக்கீர்
கண்டகியிற் புக்காடிக காளிபதின் வாண்முகத்தை
யண்டினமீங் கின்னுங்கே ளாயரு. (௩)

கன்னபுரி யென்னுங் கடிநகரை யாள்கின்ற
மன்னன் மதிமருமான் சோமநயன் - சென்னிநதி
யாரிணங்க வைத்தா னருளாவர்த்தா லிந்துமதிப்
பேரணங்கைத் தானெடுத்தான் பெற்று. (௪)

தீம்பாற் கடலுண்ட செல்வன்ற னம்மான்வீழ்
காம்பாருந் தோண்மடந்தை கற்பகனி - ரும்பயிர்ப்பு
நாணமட நாற்குணனு நண்ணகத்தம் மாதெழிலிற்
பூணகிலப் புண்டரிகப் பொன். (௫)

காரிகைக்கு நீள்கருங்கட் கஞ்சமல ரானனத்துக்
காரிகைக்குக் கல்யாணங் கண்டுகொடேன் - காரிகைக்கு
மன்னளந்த னெம்மான் குறித்தமகற் கன்றியெனச்
சொன்னதுண்டம் மானிசைநின் றேட்கு. (௬)

என்றார் முறைதிறம்பா வேந்தலரிச் சந்திரன்மால்
வென்றார் பொழிவளியான் வெங்காமத் - தன்றார
வோங்கியுளந் தீக்கனிறை யோர்ப்பறிவோ டொண்பொறையு
நீங்கியுட னின்றான் றளர்ந்து. (௭)

பின்னரந்த மோகமெனப் பேசுழலை யுண்மையுணர்
வென்னளிர்நீ சானவியா வேந்தயிற்கை - மன்னவர்கோன்
றிண்ணிலமீ தெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும்
பண்ணவர்க டம்மைமுகம் பார்த்து. (௮)

அவ்வியனீள் கோதை யரவிர்தை யன்றனை
வலலையடி யேற்கு மணம்புணர்க்க - நல்லருளைக்
குன்றனையீர் நுங்களருள் கூடினென்பா லின்னுயிர்தா
னின்றுளதா மென்று னெடுத்து. (௯)

ஆவும் புலியுமடுத் தார்த்துதுறை யொன்றியங்கப்
பூவலயந் தாங்கிறைவா பூவலதனை - நீவதுவை
சூட்டயாஞ் செய்வதெவன் சூழ்ந்ததுதா னின்னதெனக்
காட்டுவா யென்றிசைத்தார் காண். (௧௦)

மானவிர்பொற் றேர்வேந்தன் வாய்புதைத்துக் கைம்மலரான்
மோனநிலை மேயோர் முகநோக்கிப்—பானல்விழி
மாதையடியேன் மணஞ்சூட்ட நீவிரும்
பாதைவன நீந்திப் படர்ந்து. (௧௧)

கன்னிகையைப் பெற்றானைக் கண்டு மணமொழிந்து
பின்னரவன் பேசுதிற மெல்லாங்கேட்—டென்னிடையே
மீண்டு மெழுந்தருளல் வேண்டு மெனவிளம
பூண்டொயாற் சொற்றான் புகழ்ந்து. (௧௨)

சொற்றதுகேட் டைந்தவித்த தூயோர் கருணைபொங்க
மற்றடந்தோண் மன்னா மறுவலும்யா—முற்றிடவெ
மும்மனத்தைக் காணபமெனி னோருறுதி வேறுண்டோ
வம்மவெமக் கீதல்லா தாங்கு. (௧௩)

என்றா ரெழுந்திருந்தா ரேந்தலரிச் சந்திரனின்
குன்றா வகலத்தக் கோதைதிற—மொன்றாக
வென்றாசிகூறி யெழின்மண் டபமகன்று
சென்றார் திருநகரி னின்று. (௧௪)

மாதவர்கள் போயதற்பின் மாமண் டபர்தணைந்து
தாதவிழுதார் வேந்தன் சயனவறைச்—சேதியனை
யுறறநஙகன் வாளி யுடல்குளிப்பக் காமமெனச்
சொற்றகடல் வாய்விழுந்தான் சோர்ந்து. (கரு)

மாழாந்தா னுள்ளம் வருந்தினுன் மெய்தளர்ந்தான்
காழார்ந்த காமக் கடுஙகனலால்—வீழாவி
சோர்ந்துசெய லறறுன் சுடர்மெழுகிற ருகுருகி
யோர்ந்திலைநெஞ் சோடொத்தா னுறறு. (கசு)

பாயளககர் போலும் படையான [illegible]யதன்றன்
சேயரிக்கண் மஞ்ஞையன்னுள் சீயரொடு—மாயமா
வணடியிவ னெம்முளம்புக காருயிரை வெளவிகைக்
கொண்டகன்ரு ளோவறியேங் கூர்ந்து. (கஎ)

தொட்ட கடலுலகம் யான்காவல் சூழ்ந்தவன்று
தொட்டுக் கரவின்றித தோய்ந்ததின்ரு—மட்டவிழுதார்க்
கூழைமட மானென்றெம் மாவிகள்ளங் கொண் டதுதா
னேழைமையே மாண வெமககு. (கஅ)

திங்கள்வழி வந்த திறற்சந் திரதயன்றன்
பொங்குதவத் துறபவித்த பூங்கொடியே—யிங்கு
வடுபபிறங்குஞ் செய்கை மனமுவந்து வான்ருய்
குடிப்பிறந்தார் செய்குவரோ கூறு. (ககூ)

வல்லியிடைச் சென்ற மனமவட்கென் வாட்டத்தைச்
சொல்லியிவண் யாறைத்துன்னிடுமோ—வல்லதிவ்வா
தீந்திடுமோ வாதையெனக் கீதலுறும் வாதையது
தாழந்திடுமோ வேறிடுமோ தான். (௨௰)

என்று கதழ்ந்துசுடு மேவா சுசுக்கணிமேற்
சென்றிருளைக் கால்சிக்குஞ் செங்கதிர்முற்—றுன்றிவற்றிற்
சாலவும்வெய் தாங்காமந் தான்கடவே மாழ்கிப்பூ
பாலை னிருந்தனனிப் பால். (௨௧)

மாணிகர்சோ மான்வதுவை சூட்ட மணமொழிவான்
போனவருந் தாபதர்கள் பூகமலி—வானபொழி
லன்னமுறை பொய்கை யகன்றாறு கான்கடந்து
கன்னபுரி மூதூரைக் கண்டு. (உஉ)

ஏகியண்டர் போற்று மெழிற்கழற்கா லிந்துதயன்
போகியின்மன் னோலக்கம் புக்கனர்க - ளோசையுடன்
மன்ன னெழுந்திருந்து மாமுடிக்க ணவ்வுரவோர்
பொன்னடிப்பூச் சூட்டிப் புரிந்து. (உங)

வாழ்த்தியவ னோர்க்கு மணிப்பீடம் வேறளித்துப்
பூத்தவிசின் மீதமர்ந்து புண்ணியநீர்த் - தீர்த்திகையாங்
கண்டகிப்பா னீயிர் கசிவொடுநீ ராடிநுந்தாண்
முண்டகப்பூச் சேர்த்தென் முடிக்கு. (உச)

போனீ ருடனே புகுந்தீர் புரிவெவன்கொ
றுனேயுணர நவிற்றுமென - வூனரும்
பற்றிரண்டு நீத்தவர்கள் பார்த்திவனைப் பார்த்தருளாற்
சொற்றவையாங் கூறுகநீ கேள். (உரு)

சென்றிங் கயோத்திநகர் சேர்ந்தவட்செங் கோலோச்சி
நின்றவரு ணைஞ்சனரிச் சந்திரற்கூ - ரொன்றுவள
னின்னெறியு நின்றனலயவன்னமும்யாம் பேசநின்பாற்
றுன்னுவகை நின்றான் றுணிந்து. (உசு)

அறநெறியின் மிக்கோர்க் கருந்ததிபோற் கற்பின்
செறிவுடைய மானினியைச் சேர்த்தன் - மறநெறியன்
றூற்றுதவத் தோங்குநெறி யாதலினாற் போந்தனம்யாம்
பாற்றினஞ்சூழ் வேலிறைநின் பால். (உஎ)

காசினியெல் லாம்புகுந்து கண்டனம்பல் வேந்தர்தமைப்
பாசிழையாள் பாகனல்க நீபயந்த - கேசரங்க
னன்றவிழ்தார் நங்கைக்கு நண்ப னவனலதில்
லென்றருளிச் செய்தா ரெடுத்து. (உஅ)

களைசந்து துற வுற்றோர் நவின்றதனைக் கேளா
விளைசந்து மிசையாறு யுள்ள - மசைந்தளியார்
மொய்யலங்கன் மார்பன் முதல்வன் மொழிவகைச்குச்
செய்வதென்று மென்று நினைத்து. (௨௯)

நீத்தாரைப் பார்த்தடிகே ணின்மலனு மோதியதோ
ரோத்தாருந் தேவ விராசியமுண - டோர்த்தாரே
யன்னதனை யாவ ருநகொழுநர் யானளிதத
வன்னநடை யங்கனைகின் றால். (௩0)

ஈண்டனயோத்தியர்கோ னெய்தி னறிந்திடலா
மாண்டகையன் றுனை யழைமினென்று - னீண்டவைகை
விட்டபெரும் பாசதநா வேதத்தவையி னீங்கிநகாக்
கட்டகன்று போனார் கடிது. (௩௧)

மங்கை சுயம்வரநா ளேழென்று மாநிலத்திற்
கொங்கவிழ்தார் வேந்தர்க்குக் கூறுமென - வெங்களிற்று
மன்னவர்கோன் றூதுவரை மாமுடங்க லோடுவிட்டா
னன்னவர் போய்ச் சொற்றளித்தா ராங்கு. (௩௨)

முத்திலகும் பிச்ச முடியரச ரெல்லோரு
மெத்தவகை வேட்கைபொங்கி வின்னுதலார் - புத்திமிகு
மந்திரிக ளல்வகைய சேனை மருங்குறவே
தந்நகர் தேயந் தணந்து. (௩௩)

முன்னாளிற் பொன்மாலை மூழ்கமரு மானழைப்பத்
தோன்றார வேழ்கடலுந் துன்றியபோல் - மின்றாரற்
காவலூரு மிப்பதியிற் காண்டகைய முன்றிலங்கா
வாவியெலாம் வந்திறுத்தார் மன். (௩௪)

போன முனிவரர்கள் புக்கா ரயோத்திநகர்
கோனெழுந்தன் னேரைக் குலவணையிற் - றானிருத்தி
வாய்புனைத்து நீயிர் வலந்ததுவுங் கேட்டதுவுந்
தாய்கிளர்த்தீர் சாற்றுமென் றான் றாழ்ந்து. (௩௫)

வார்ந்தகரத் தன்னு ளினக்கே மணமுடிக்க
நேர்ந்தவிடை மாலை நிருபனுள - நேர்ந்தனலும்
வல்லையவ னீயும் வருகெம் முடனென்றுச்
சொல்லினர்க ளோயா தொகுத்து. (௩௬)

அங்கதுகேட் டோங்கு மகிழ்ந்த குதூகலத்தான்
வீங்கபுயச் கேயூரம் விண்டகல - வாங்கரும்பொற்
குன்றினுநீள் கோயில் குறைகழற்கா ற கோலகன்று
முன்றின் முகத்தணைந்து நின்று. (௩௭)

பூச்சமென வேழம் பொலிபழனக் கன்றேறி
நோக்கியிவ்வூர் மன்னவர்க ளுல்லவல்லோ - நோக்கயிலார்
மண்டனிக முன்னுசெனு வாய்மலர்ந்து சூதனைத்தேர்
கொண்டணைக வென்றான் குறித்து. (௩௮)

பாகனணி மான்கொடித்தேர் பண்ணிக் கொணர்ந்திறைஞ்ச
மேகமென விம்மலை வார்முரசஞ் - சாகரமாத்
துண்டமுற வேலெறிந்த தோன்றனகர் கோசலர்கோன்
கொண்டதன்மே லூர்ந்தான் குறித்து. (௩௯)

குற்றேவ லாற்றுபல கொற்றவர்த நீள்கொடிஞ்சிப்
பொற்றேரும் பொன்னைப் புனையமைச்ச - ருற்றேறுந்
தண்டிகையுங் காரிகையார் தாமிவரும் வாகனமு
மண்டியிறை பானடந்த மன். (௪௦)

கந்தியுறழ் கண்டத் தருந்ததிதன் காந்தனுமொண்
சந்திரனோர் யானமிசைத் தான்போத - விந்திரிய
மாதங்கப் பாகர்நர வாகனமேற் கொள்ளார்விண்
மீதண்டிப் போனார் விரைந்து. (௪௧)

கோட்டிமயம் போலுங் கொடிமணித்தின் டேருமந்தக்
கோட்டமனுங் கொண்டனிகர் யானையுமவ் - வீட்டமின்
மெய்பரவை நேர்படையும் வெங்கையெழு வெண்டிரைகான்
பாய்பரியுஞ் சென்ற பரந்து. (௪௨)

இன்னவகை யேகி யெழிற்சரயு யாறிகந்து
தொன்னவில்வேற்சோமானுங் கோமதியென் - னன்னதியைச்
சார்ந்தா னனீகமொடுஞ் சாயைநலந் துய்ப்பவனுஞ்
சேர்ந்தான் குடகடலைச் சென்று. (௪௩)

வண்டமர்தா ராடுநிற மன்னவன்றேர் விட்டிறங்க -
மண்டலிகர் மந்திரியர் வாட்கண்ணார் - கண்டநிலை
யாவருந்தம் மூர்தி யிறங்கிநதி தீரத்தே
மாவுழைவை பூட்டா மரத்து. (௪௪)

வானுண் மணன் றெமிரும் வண்டலிடை மாமணியிற்
பானுண் படாத்திற் படங்கமைத்து - மேனிமிரும்
பொன்முடிகள் வைத்துப் பொலிவார் பதாகைகட்டி
மின்மணிக ணீளெழினி வீழ்த்து. (௪௫)

ஆதவன்செம் பாந்தளஞ்சி யார்ந்ததென வேற்றியெழுஞ்
சோதிமணித் தீபந் துலங்கவிட்டு—வேதமுறை
யந்திக் கடனைத்து மாற்றி யயர்வுயிரா
வந்தித் திருந்தனர்க ளாங்கு. (௪௬)

வனப்புடையன் கொல்லோ மணவாள னென்று
வனத்தளகச் சந்த்ர மதிமுந்—தினத்தவிர்நீற்
பாரகத்தைக் கீன்றெட்டிப் பார்த்தென்னத் தோன்றினன்மீ
றூரிடத்திற் றண்கதிரோ னால். (௪௭)

பானரலை பொங்கிப் பரந்தனைய வானிலவின்
மானயன மாதரொடு காதலர்கள்—வானணையிற்
றுஞ்சினர்கள் பூங்குழறகாற் றோன்ற றனிகிடந்து
விஞ்சுவிர கத்துறககம் விட்டு. (௪௮)

கன்னி யுருவெளியிற் கண்டுவெந்து நெஞ்சழிந்துந்
துன்னிரவோ டம்புலியைத் தூடித்து—மன்னிணைறும்
கண்டதனைக் கோழி கரைந்துரைப்பப் பொற்றேரிற்
கண்டனனைந் தான்விசும்பிற் சார்ந்து. (௪௯)

வார்முரசஞ் சங்கதிர வைகறையிற் செய்கடனைப்
பார்முறைகோ டாதளிப்போன் பண்ணிநெடுந் - தேர்மிசைக்
டெல்லோருந் தம்மையடைந் தேறிவரத் தானையொடு [கொண
டல்லோத யாற்றைக் கடந்து. (௫௦)

சந்தவனச் சாரலிடைச் சார்ந்தமணப் பூம்பொழில்வாய்
வந்திரதம் விட்டிழிந்தான் மறையவருந்—தந்தமது
வாகனத்தி னின்றிழிந்தார் வாரருவி வனசுனையி
லேகினார்நீ ராடி யினிது. (௫௧)

கந்தமலர் குற்றுக் கஞல்வனமும் வார்புனமுந்
தந்தமலி நீள்குகையுந் தனபளிங்கி—னர்தறையுஞ்
சென்றிரவி யுச்சிச் செறிபுதுமை யாவுமபார்த்
தன்றிரவு வைகினர்க ளாங்கு. (௫௨)

உற்ற புலரிதனி லொண்டளத்தோ டேறிரதம்
வெற்றவயில் வேந்தன்போய விண்ணிறுவுற—யற்றுமான்
கோமடனே நீந்து குவிந்திருப்பக் காணலற
லோடுகசம் பாலையுற்றா றேர். (௫௩)

அங்கணுய ராலயத்தே யாளிமணிப் பீடிகைமேல்
வெங்கரியின் றேறுஊந்தது விந்தைமகள்—பொஙகலகை
பூத பிடாகினிகள் போற்றிப் பணிசெயமுக்
காதிகேவே லேந்திக் காதது. (௫௪)

பாங்கி லரம்பையர்கள் பைங்கவரி வீசிநிற்ப
வாங்கு திளையுந்த்த மன்னவரு—மோங்குவணை
வாழ்ந்திருக்கும் புங்கவரும் வந்துமுன்றில் வாய்த்துதித்தே
தாழ்ந்திறைஞ்ச வீற்றிருந்தா டான். (௫௫)

அவ்வேலை யண்ண லரியணையான் றேரிழிந்து
செவ்வேலை யேந்தியகைச் சேவகரு—மைவ்வீர
மொத்தமத வாரணமு மூதையிற்செல் கோடாமும்
வைத்துமணி வாயின் மருங்கு. (௫௬)

நீடுவேட மீன்றவனு நீத்தவருங் காவலருங்
கூடிவர முன்றில குறுகினர—தாடிறைஞ்சி
வாழ்த்தித் திருமனையில் வாயிலிறகல் லாகின்ற
மாத்திகிரி விற்கணையை மற்று. (௪௭)

பார்த்தனன்மா ளந்தி பராயணனு மெய்ஞ்ஞானி
பார்த்தருளப் பண்டுசெசி வன்னமெனும்—பார்த்தலத்தின்
மாசற்ற மன்னியபோன் மற்றவைதாம் பைங்கனகத்
தேசுற்று நின்ற திகழ்ந்து. (௪௮)

ஆங்கனது காணூஉ வாசனிறும் பூதெய்தி
யிங்கணிவை யிங்ஙனுறற் கேதுவென்றெனன்—றங்குளநதி
லெண்ணு விருந்தா னிருண்டவடி வோடணைந்தா
னென்னனின் புயத்தா னினிது (௪௯)

செங்கை மலர்முகிழ்த்துச் சென்னிமிசை வைத்திறைமா
தங்கி மலர்பாதத்திற றூழ்ந்தன் று—பிங்கணிவை
முற்கவுரு வாகிப்பின் மொய்கனக மானதிற
னொற்கருணீ யென்று னினிது. (௫௦)

மற்றதனைக் கேட்டருளி மாமடேடமர்த்தனிதான்
கொற்றவனை நோக்கியது கூறுவலகேள்—வெற்றவடி
வேலிறைவ முன்பததி வேந்தனுயர் பொன்னிழைதத
தோலிவுனி விற்றோர் குறித்து. (௫௧)

காசினிமேல் யாருஞ் சுவராமே கல்லாகப்
பேசுபொரு சாபம் பிறப்பதுமிவை - யேகிலெவர்
பார்வையினுற் பண்டைப் பளகிலுரு வெய்துமவ
ராரிவற்றிற் காமரூக ரால். (௫௨)

அன்னூர்தமக்கே யளித்தருள்வா யீண்டிவற்றை
யன்று மெனவைத் தகன்றனனிக் - கந்தமொடொட்
டுங்கெடுநாட் கல்லாய்க் கிடந்தருளி தேதுக்குமுன்போன்
மீண்டுமினை ய கொள்கென்றான் மற்று. (௫௩)

போற்றியவை கொண்டு புரவலன்போற் றேரிவர்ந்து
கூற்றமுறழ் கண்ணார் குலவமைச—ரேற்றநிகர்
மண்டலிகர் மற்றெவரும வையமிசைச் சூழ்வரமுன்
றண்டுசெலத் தார்கவிகை சார்ந்து. (௬௪)

விண்டா சினிகதலி மென்பழத்தின் சாறொழுகி
மண்டாசி னெறபணைசூழ வாவியிடை - வண்டாடு
பிண்டோசை கேட்டெகின மீங்கமல மீதுறங்கு
கண்டோசி நாடணைந்து காண. (௬௫)

ஆனதிணை பல்ல வகன்றாக நல்குபுனற்
கானவியைச் சாரதிழிந்து தந்திசைத் - தானிவராத்
தோய்ந்து நதியதனிற் றுன்றுவபபின் யாவரொடு
நீந்தியெதிர்குலையை நேர்ந்து. (௬௬)

ஆங்கணகன் றேகி யலைபணிரி நேர்சிடங்கி
றோங்கியிரு ளோட்டிரவி யொண்கதிர்தடேர் - வாங்குதிரை
மோதுசொடி வாய்ந்தவெயின் முற்றுகன்ன மாபுரியின்
சோதிமணி வாய்துனைவிற புசகு. (௬௭)

தோரணத்து நீழலமர் சோதிமணி வேதிகைமேற
பரணப்பொற ரும்பமொடு பொங்குசுட - ரிணங்கு
தெள்ளளலிகந் தேகியப நின்றிழிந்து சந்த்ரதய
வள்ளலவை யுற்றான் மகிழ்ந்து. (௬௮)

வல்லையெழீஇக் கன்னபுரி மன்னன் மருங்கிருந்த
வெல்லவாக னோடு மெதிர்சென்று - சொல்லரிய
வோகையுட னண்ணலரிச சந்திரனை யொண்கரத்தா
லாகமுறத் தான்கொண டணைத்து. (௬௯)

பின்னருடன் போந்த பெரியர்தமைத் தண்டணிட்டு
நன்னரணை மீதிருத்தி நன்முகமன் - பன்னியணை
மற்றெவரு மேவியபின் மன்னிமரு மான்வனப்பை
யுற்றிமையான் பார்த்தா னுவந்து. (௭௰)

பேணிமணி மாங்கணைந்த பீடுறுதேர்ட் காவலர்கள்
யாணரம்பி னின்சொ லிடுகிடையார் - மாணமைச்சர்
தாமுமரிச் சந்திரனைச் சற்றிமையார் பார்த்துரைத்தார்
காமனிவ னென்றே கரைந்து. (எக)

நாயகனுப் பொன்னிறத்து நம்பியிவன் றன்னை யொளிர்
சாயநாட் டத்துநங்கை தான்பெறுமே - லாயிழையை
யாம்பெறுவா றுற்றுதவ மாதவமே யாகுமெனுத்
தேம்பொதிதார்க் கோமான்சிந் தித்து. (எஉ)

சேவுயர்த்தோன் சொற்படியே செல்விதனை யாமளித்து
மேவுதிர்நீர் நாளை மிளிர்வதுவைக் - காவணத்தே
யின்றுமது சார்புவயி னேகுமினென் றுங்கிசைத்தான்
குன்றுறழ்தேர் மன்னர்க் குறிதது. (எங)

அன்னதுகேட் டார மலங்குமதித் தண்சவிகை
மன்னவர்போய்த் தத்தம் வழங்கிடத்துத் - துன்னினர்மற்
றுளிங்கர் கோசலர்கோ னுங்ககன்று சென்றிபத்தின்
மாளிகையைச் சார்ந்தான் மகிழ்ந்து. (எச)

நல்லா ளொருத்தி நரபதிய வைக்கணிகழ்
வெல்லாந்தா னேக்கி யிறையுமவ - னில்லாதே
யோடியெழில் வாயிறணந் தொண்பணைத்தோ ளிந்துமதி
கூடியநீள் கோயிலடைந் தாள். (எரு)

அடைந்தாள் வதனத்தை யாயிழையாள் கண்டு
படர்ந்தாய்வல் லீண்டப் பரிசென் - மடந்தாய்சொல்
லென்றுளம் மா திறைஞ்சி யின்னிசையான் மாங்குயிலை
வென்றாய் விளம்புவல்கே ணீ. (எசு)

செக்கிருவே யின்னைத் திருமணஞ்செய் வான்விரும்பி
யந்தரமீ னென்ன வரசரிங்குன் - றந்தைசவை
யுத்திருந்தார் மற்றவருள் வான்சரயு நாட்டதிபன்
சந்திரன்போல் வீற்றிருந்தான் சார்ந்து. (எஎ)

அன்னான் றனைஅ தரிகண் முடியுரிஞ்சும்
பொன்னார் கழல்புனைந்த பூஞ்சரணம் - தன்னாற்றி
னிந்திரன் சங்க நிலவஞ் செழுமுழுந்தா
னேடுகேரிச் கைநாண் டொடை. (எஅ)

சிங்கம் விழைமாங்கு ரேசகன்ற தார்மருமச்
தங்கநவக கோனொரநாள் சூழ்ந்துவருரு - செங்கனக
மாலைவளையம் மானுமணி வாகுவுடன் டாவாகரு
மால்வளையா ழியுமலாக கை (எகூ)

வெண்மணில மேய்ந்தகளம் வார்மகர குண்டலசகா [புத
(தாண்டொடறு நீணியர்மூக கோமமின்சொற - றணைமி
மலடாத்த வாய்சருணை வார்தடங்கண் வறபுதல்சேர்
(காணடுபொங் கோங்கு குளம். (அ0)

பொங்களிதே னுண்டிமிரும் பொறபதுமம் போலலர்ந்த
துங்கமுகங் கண்டக்காற சொர்க்கததது - மங்கையர்தாம்
பிலனுமமாரு கோலை யணையப பிறக்குளத்தான்
முளைறுவரோ வென்றுண் முகநது. (அக)

வார்த்தையது கேட்டலுமே மங்கை கொடி மருங்கிற
சாதுகலை யொடெழிற்கைச் சங்கமுந்தா - வீத்துலவா
வாசைக கடற்படிந்தா ளாதவனு மேறநரங்க
வோசைக் கடறபடிந்தா னற்று. (அஉ)

ஒன்றுதிறல் வாணனுறை சோணிதமூ தூரெயிலபோற
றுன்றியசெவ் வானைத் தொடர்மாலை - சென்றகல
வென்ற துணங்கறலன் றின்னனுநீஇ வாசுகிநான்
கான்ற கடுப்போற்பாய்ந் தன்று. (அங)

சார்ந்தனரூங் கப்புலியார் தண்கவிகை மேல்வயங்க
வார்ந்தகடன் மாமுரசு மன்னியம்ப - வீர்ந்தனலக்
சோரகலையாம் வில்லுடன்மீன் கோட்டுகொடித்தென்றற்றேர்
மேறகொய்மெய் யற்றமதவேள். (அச)

வேடன் விறற்கருப்பு வில்வளைக்கித் தேன்பருகிப்
பாடலிநா ணேற்றிப் பதுமமுத - னீடுகணை
யேவமட மானுங்க வெய்ததாவி சோர்ந்துநனி
பூவமளி மேற்புலம்பி வீழ்ந்து. (அரு)

சிலம்பளிநாண் விற்பூட்டித் தேமலர்க்கோ றூவிப்
புலம்பறுவார் தம்மைப் பொருத - வலம்பெறுஉ
மாரனினைத் தான்வயிறு வாய்த்தற்கென் ஞேறறனளோ
சீரியகின் றூய்மனத்திற் றேர்ந்து. (அசு)

தீவினைக்கோட் பட்டார்க்குச் செய்யமன மாதாவு
பாவெனத்தீங் சாற்றுகிற்பாள் போலுந்தண் - கோவினனே
நின்றே சிகந்த கேடுமேபி னூற்றவெனக்
கின்றுங் கியற்றுதலா னீ. (அஎ)

விந்த வியன் கிரியின் வீறடக்கித் தென்மலைவாழ்
கிர்தமுனி மாடனெனச் செங்கரதநிற் - சிந்துநினைக்
கொண்டுண்ட துணைமையெனிற் கூர்விழும மீண்டெனக்குக்
கண்டின்று பொங்குலவோ காண். (அஅ)

என்றுரையா நின்றுளிருவளையர்தார் தென்மலயக்
குன்றுயரா ரக்குறட்டைத் தண்பனிநீர் - துன்றவிட்டுத்
தேய்த்து நரந்தாதி சேர்த்தவண்மேற் பூசியுக்கம்
வாய்ந்தமலர்க் கைவீச மன். (அகூ)

நெய்சொரிய மூளு நெருப்பெனவெங் காமவனல்
வெய்தெனமே லோங்குதலான் விற்றரள - நொய்தடலை
யாக விழியருவி பாய வணங்கனையாள்
சோக மொடு கிடந்தாள் சோர்ந்து. (கூ0)

அமணிருளி லாழ்ந்துசித ளூர்சுரத்தல் லாபத்
தமிழ்விரகர் தைவந்து தீர்த்தாங் - கமிழ்துனையாள்
காமசுரத் தொழுநோக் காய்வலெலுறு மற்றாணி
யேமமணித் தேரனைத்தா னெய்ந்து. (கூக)

வாவிமலைத் தேனுகர்ந்து வண்டினங்கண் மொய்த்திரைந்து
காவினெலாம் புட்கள் களித்திசைத்த - கோவிலெலாஞ்
சங்கந் தழங்கினவே தார்வேந்தர் முன்றிலின்வாய்த்
துங்கமுர சார்த்த துதைந்து. (கூஉ)

சொன்ன சுயம் வரத்திற் கேற்ற தகளறுநாண்
முன்னலுமே முக்கனல்வேட் போருடனே-பொன்னவிழ்தார்
குன்றுறழ்தோட் சந்த்ரதயன் முனிருந்தான் கோடித்த [க்
மனறலெனும் பந்தர்க்கீழ் வந்து. (கூங)

நால்வகைய தானை நரபதிகள் பூங்கொம்பர்
போல்வனைய நுண்மருங்குற் பூவையர்க-ளுநால்வகையிற்
றேர்ந்த மதியமைச்சர் செய்யமறை யோரொவருஞ்
சேர்ந்தனர்கள் போந்து திரண்டு. (கூச)

பின்னரவன் வார்முரசம் பேர்வளையோ டார்ப்பமுகி
லன்னகுழ லார்கவரி யாங்கிரட்ட - மின்னுகொடித்
தேரணைந்து செம்மலரிச் சந்திரன்சேர்ந் தானிறங்கி
யோருருவைத் தேரொளியோ னொத்து. (கூரு)

வந்தவரெல் லோர்க்கு மதிதயனன் போடுபொன்னிற்
றந்தவிசிட்டுத் தானிருத்தித் - தந்திடையீர் [ழலாற்
கொண்டணைதிர் கோல்வளைக்கைக் கோதையையென் றன்கு
கொண்டலெவன் கண்டார்க் குறித்து. (கூசு)

சென்றந்த மாதர் திகழ்மணிப்பூ ணன்மறைத்து
மின்றந்த நேர்நுசுப்பு வீழிவாய்ப் - பொன்றனைப்
பாறகவரி தள்ளப் பரிபுரமேங் கப்பந்தர்க்
காற்கொடுவந் தார்கள் கடிது. (கூஎ)

அன்னபொழு தாரமுத மன்றனைக் காணுதற்கு
மன்னர் மகிழ்ந்தெழுந்த வார்ப்புடனே - துன்னியத்தி
றனைத துவன்றி யுகமுடிவிற் பொங்கியெழு
மோதமுழக் கோடிருந்த தொத்து. (கூஅ)

ஆங்கிலச்சை யோடெருத்தங் கோட்டிநின்ற வர்ரமுதத்
திங்குதலைச் செவ்வாய்த் திருமகட்குப் - பாங்கியர்தா
மன்னர் மரபும் வளநாடும் பேருமெண்ணி
யின்னணமோ தூற்று ரெடுத்து. (கூகூ)

வீயான தேவுணரா வேணியனைக் காந்தழலால்
வீயாத வேளனைய மீளியிவன் - வீயாடும்
வண்டாலத் தார்கண்ணி யார்ப்பொருநை நாடளிக்கும்
வண்டாலத் தார்கண்ணி மன். (க00)

காய்ந்துகளும் வேங்கைக் கதலிதனை முன்னுயர்த்துத்
தேர்திகழார்த் தாரணிந்த செம்மலிவன் - சேர்ந்த
குமுதமுறழ் வாய்க்கிளியிற் கூறணங்கே பொன்னிக்
குமுதமுறப் பாலிக்குங் கோ. (க0க)

அக்கார மென்கிளவி யல்லிமலர்ச் செந்திருவே
இக்காரம் வேம்பினொடு நண்ணகலத் - திக்காலை
மேகநக மாடகமா வீக்குகன்னி நாடேந்துங்
கோகநக மாடசமார் சோ. (க0உ)

பானற் கருநயனப் பாவா யிவனுறையும்
பானற் கதிர்த்தாளப் பைங்குடையோன் - பானற்
குருத்தண் ணடையளிக்குங் கோக்கமுகி னோங்குங்
குருத்தண் ணடையளிக்குங் கோ. (க0ங)

மயிலையுறழ் வாணயன மாதரா யீண்டிவ்
வெயிலையுமிழ் வேற்கரத்து வீரன் - கயிலையென
வன்னித் திலத்தார் மகதவள நாட்டிரத்தே
பன்னித் திலத்தார் பதி. (க0ச)

சிந்துவள கத்துகண்டு சேல்கமுகின் காயுகுக்குஞ்
சிந்துவள நாடோச்சுஞ் செங்கோல - னிந்துநுதற்
சிந்தூர மஞ்ஞுறுஞ் சேயிழையா யீங்கமருஞ்
சிந்தூர மஞ்ஞுறுஞ் சேய். (க0ரு)

தோகைபுரா சாயற் றுகிரதர காரிகையே
வாகைபுனை மாரனென மன்னுமிவன் - பூகமிசை
யங்கவளக் கோட்டததி யன்னகுயின் கலைபடுக்கு
மங்கவளக் கோட்டத் தரசு. (௧0௬)

சொய்வனசம் பங்கிபனை கோதைமட மானேகேண்
மெய்வனசம் பதநலிகர் மொய்ம்பனிவன் - செயவனசத்
தேஞ்சால நாட்டார்த திருவினத்து முதநீனும
பாஞ்சால நாட்டார் பதி. (௧0௭)

தேங்காவி யன்ன திருக்குடைய கோகிலமே
பாங்காவில் வேலங்கைப் பறறுமிவன் - பூங்காவிற்
காலங்கார தாரங் களிவண்டு பாடமயி
லாலங்கார தாரத் தரசு (௧0௮)

கீட்டிசையிற் றோன்றுங் கிளரா யிரங்கான்போற்
சேட்டிணையில் வீறிருக்குஞ் செல்வனிவன் - மாட்டினியல்
ஒண்கலிங்க நாட்டுக்க வான்பிடியே சொறபுலகீள
வண்கலிங்க நாட்டுக்க மன். (௧0௯)

காந்தாரம் பாடளிகருக கள்ளூட்டுங் கோதைநல்லாய்
சாந்தார மார்பனிவன் றூம்வீழவார்த் - தீர்நதார்சகுக்
கூற்றும வந்திக்குக் குண்டலந்தை மீன்கமுகின்
மேற்றும வந்திக்கு வேந்து. (௧௧0)

ஓதிமங்குல் விழ்மயிலே யொன்னலனா வேற்படையிற்
காதிமங்கில சீர்படைத்த காளையிவ - னோரிடங்கண்
மித்திரத்தா ரம்புயதது வீத்தவன்று நீவயலருழ
மதகிரத்தா ரம்புயத்து மன். (௧௧௧)

உட்களிபின் வார்பிரச முண்டடர்ந்து மூவிருகாட்
புட்களியிர் பூந்தார்ப் புயத்தனிவன் - புட்களிணி
மாடமரு மச்சந்தார் வாள்விழியாய் வான்றவழு
மாடமரு மச்சந்தார் மன். (௧௧௨)

பூவிலிசை மாதரும் பொறபுடைய நங்காய்கேள்
கோவிலிசை மொய்ம்பிற குமரனிவன் - காவிலிசைப்
பொங்கலிதங் காதளிசகும் பூங்குயிலார் சேசயததே
வெஙகலிதங் காதளிக்கும் வேந்து. (கக௩)

மின்மருங்குற் காரளக விம்பவிதழ்ப் பூம்பாவாய்
கனமருங்கு லாமணிததோட் காளையவன - றன்மருங்கு
மாசலநாட் டாமதிக்கு வானமிர்த மூறறினனுங
கோசலநாட் டாமதிக்குங் கோன். (கக௪)

கோசலநாட் டார்மதிக்குங் கோனென்று கூறலுமே
யாசையுட னன்று னலாமுகத்தைக - காசிழைகள்
பூட்டிகள நீட்டிப் பரிகுழலா ளேசகினளான்
மாட்டிணங்கி மாபுயத்தைத தாழ்ந்தது. (கக௫)

அணணலரிச் சந்திரனு மாவலொடு தன்னேக்கும்
பொன்னரசி வாண்முகத்தைப பெட்புடனே - கன்னற்று
மஙகலாண மஙகையவள வணபணில நேர்மிடற்றிற் [ன்
றொஙகியிலங் கககளாடான் சூழ்ந்து. (கக௬)

என்னேயிம மேதினிகக ணிப்புதுமை யானவகை
முனனே மணம்பூணட மொய்குழலாள - பின்னேபோ
ராடவனைச் சூட்டுவசொ லாய்மலர்தரா னெறன்னிப்
பாடவளைப் பெற்றேனைப் பார்த்தது. (கக௭)

கன்னபுரி மன்னவனே கல்யாண மானவொரு
கன்னிதனை மீட்டுமணங் காண்குவரோ - வென்னையிவட்
கின்னவர்போற செய்தனைநீ யென்று னயோத்தியர்தங
கன்னவிறேட் கோமான் கவன்று. (கக௮)

உற்றதனைக் கேட்ட மதிதயன்றான் டேருவகை
யுற்றனன்காட் டானதனை யுள்ளடக்கிக் - கொற்றவர்கான்
கோசலர்கோன் கூறியசொற கோளாமோ மெய்யாமோ
பேசுதிநீ யென்றுள் பிரிந்து. (கக௯)

அப்போ தரச ரயோத்திநகர் வேந்தனைப்பார்த்
திப்போது கண்கூடாக் காட்டெமக்கே - யொப்போது
கண்ணிகளத் தாலியெனுக் கையறைநது மூக்கிறசேர்த்
தண்ணலுரை பொய்யென்று ராங்கு. (கஉ0)

மற்றடந்தோட் சந்த்ரதயன் மன்னவரை நோக்கியிந்த
வெற்றவடி வேற்கரத்து வேந்தனியாம் - பெற்றகொடி
மங்கலநாண் கண்டதுநீர் மற்றதுகா ணுததுவு
மங்கருமோர் மந்த்ரமா மன். (கஉக)

கங்கைபிறை வேணிபுனை கத்தன் வரந்தருநாண்
மங்கையொடு தோன்றிட்ட மங்கலநா - ணங்கணினற்
கண்டவனே சாரிகைக்குக் காதலனு மென்றமொழி
யுண்டதாஅன் றின்னுமிங்கொன் றுண்டு. (கஉஉ)

கேட்டிரது வேந்திர் இளக்குவல்யான் சிற்பரனூர்
நீட்டுவரத் துற்றநிலை நேருருவங் - காட்டியதிற்
காண்பதன்றி நங்கைக்குங் கைச்செய்தா யாவெவருங்
காண்கிலமா லென்றிசைத்தான் காண். (கஉங)

அந்நிலையிற் சந்த்ரமதி யண்ணலரிச் சந்திரனை
யுன்னியுளத் தொண்மாலை வானெறிந்தா - ளன்னதுபோய்
வண்சரயு நாடன் வரைப்புயத்திற் றுன்னியதைந்
தெண்கருவி யார்த்த வெழுந்து. (கஉச)

வள்ளலரிச் சந்திரனு மார்த்தாண்டன் முற்பந்தர்ச்
குள்ளமர்ந்த மன்னர் குளிர்வதன - வொள்ளாம்பல்
கூம்பினவே செல்விமுகக் கோகனகந் தாதைமுகத்
தேம்பதுமம் விண்ட திகழ்ந்து. (கஉரு)

சோதிடர்கள் சூழ்ந்துரைத்த நாள்வாய் வசிட்டனைமுன்
மாதவர்கள் வாழ்த்தெடுப்பப் பல்லியத்தி - யோதையெழ
மாமன்றன் முற்றியபின் வல்லியொடு கோசலர்வேந்
தேமஞ்ச ணம்மனைக்க ணேய்ந்து. (கஉசு)

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுளவென்னும் - பண்டைமொழி
மெய்ப்பொருளைச் சோதித்தான் வீழ்ந்துபல நாட்கயறகட்
டெப்புறழ்வாய்த் தோகைமென்றோ டேய்ந்து. (௧௨௭)

பொன்றுஞ்சு பார்பன் பொலங்கதிர்ப்பூண் மாறெடுதன்
மின்றுஞ்சு மாட வியனகர்கருக - சென்றெய்த
வுன்னியதை மாமற் குணர்ததிவிடை கொண்டவனல்
இன்னிபமுன் யெளதகமு மேற்று. (௧௨௮)

ஐங்கவனக் கொய்யுளைமா ணூர்த்தமணிப் பொற்றேரிற்
செங்கதிர்வேற செம்மலெனச் செம்மாந்து - செங்கமலை
யன்ன ளுடனிவர்ந்தங் காப்பமுர சார்கலியின்
மின்னூர் குடைநிழற்ற மேல். (௧௨௯)

அதிருடுக்கை நேர்மருங்கு லாயிழையா ரம்பொற்
கதிருமிழுங் காற்கவரி வீசச் - சதுரங்க
சேனைக் கடன்மிடைந்து செல்ல முனைந்தயங்கப்
பானற் பதாகை பறந்து. (௧௩௦)

கும்பமுனி பின்னுதிதோன் கோலமணித தண்டிகையி
னும்பரினி தேறியுற வொண்கயலோ - டம்பனுகருங்
கணமடவார் காய்களிற்று காவலர்க ளூலமைச்ச
ரண்மிவர வையத் துணைந்து. (௧௩௧)

வார்பயிலு நீள்கிடங்கு வாய்ந்தொளிருங் கன்னபுரிக்
கார்பயிலுங் காப்பின் கடையிகந்தங் - கேர்பயிலுஞ்
செஞ்சரண வெண்டேலிச் சேவலெலுன் பேடுதழீஇத்
துஞ்சுமலர்ப் பண்ணையுற்றான் சூழ்ந்து. (௧௩௨)

ஆதபத்தால் வெம்மை புறத்தே யடையினுமுட்
சீதமுறு நன்னீர்ச் செழுந்தடங்கண் - மாதவர்க
ளெஞ்ஞை நிகர்ப்பனகீ நேரிழையாய் காணென்றான்
மஞ்ஞை நிகர்த்தகர மன். (௧௩௩)

இம்மூழநமண் வான்வளிதீ யின்னுயிராய்ப் பற்றின்
றமல னமர்வதுபோ லாவிக் - கமலத்தா
மீது நறுஞ்சலில மேவித் திகழ்வதுகாண்
காதயில்வேற் கண்ணாய் கடிது. (௧௫௪)

கறுளாக் கறுளோ காழுறறு நற்கழகத்
துறுங்கு வெண்ணேவி யோதிமங்க - ளற்று
மனைகயத்திற் சேர்ந்துறைவ வாளவிழியிற் காண்டி
வினைக்கதுபவி னங்காய் விரைந்து. (௧௫௫)

உற்றக்கா லொற்க ழுவர்த்தகலா தொட்டியுறும்
பெற்றியர்போற கொட்டியொடு பேராம்பல - வற்றியநீள்
பனைகைக்கட் டுன்னுவநீ பாராய்செங் காந்தளங்கை
வினையைப பொருவுடையாய் வீழ்ந்து. (௧௫௬)

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காக்கு மறிவினர்போற - காய்நெறியும்
பன்னர்க் கிருநிழலை பாலிக்கும் பாதவத்தைத
தெள்ளமுதச சொல்லணங்கே தேர. (௧௫௭)

நலலார் பலரிடத்து நண்ணிநிலை பார்த்திருந்து
கலலாக களிக்குமகன் போன்மலாக - வெல்லாம்போய்த்
தேனுண்ட டளிகள் செருக்குவநீ காரிகைமை
தானுண்ட வொளிர்தடங்கண சாதத. (௧௫௮)

இன்றுசெய் தார்க்கு மினியசெயுஞ் சான்றோரிற்
றின்றாவத் தாற்சந் திரர்வீச—வன்றூர்க்கும்
பொங்கர் கனிசொரியும் பொற்பதனைப் பார்த்தருளாய்
திங்களுதற் செந்திருவே நீ. (௧௫௯)

கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போமாசகண் மானமா—னின்காகைக்
கூட்டிற் குடம்பையுறக் கோகிலங்கள் சேணகல்வ
பாட்டளிசூழ் பூங்குழலாய் பார். (௧௬௦)

ஒப்புரவு தன்னைநயந் தாங்கியற்று நல்லவர்பாற்
றுப்புறுநற் செல்வந் துவன்றியபோ—லப்படிவிற்
சிதநறுந் தீர்த்தஞ் செறிந்திருததல் வள்ளையுறழ்
காதளவு நீள்விழியாய் காண். (கசக)

ஒத்தவுர னுள்ளா ருறுந்துணையுங் காத்திருக்கும்
வித்தகரி னேரிமடை மேற்குரணடங்—தத்துசிறு
மீனேக விட்டுறுமீன் மேவளவுஞ் சோர்ந்தமர்வ
மானேகண் சாத்தாய் மகிழ்ந்து. (கசஉ)

பெற்றூர்க்கொன் றீகலான் பேரறஞ்செய் யானுடம்பைச்
சேறநீட்டி வைத்திழக்குஞ் செல்வனைப்போ—னற்றூழை
மேன்மாடு மேய்ககியிருல கொள்ளவளி விம்முவபார்
பான்மானுஞ் சொலலாய பரிந்து. (கசங)

கொல்லையுழு வோர்படைக்குக் குற்றியினைச் சார்தருபுல்
லொல்குதலின் றுறநிருப்ப வல்லவரை—யல்லவர்சேர்ந்
தொன்னலரை யுட்கா துறுவதுபோ லாமதுகாண்
மின்னுருவ மாதே விழைந்து. (கசச)

நுண்ணறிவு மாந்தர்கசு நூல்கறற வத்துணையே
நண்ணுவது போறகாமர் நாற்றிறைப்ப—மண்ணகழ்ந்த
கேணியெலா மூறுவபைங் கிளைவிழை திகழுதலை
வாணுதலே நோககாய் மகிழ்ந்து. (கசரு)

தண்கதிரி னூற்புரக்குஞ் சந்திரனின் முன்னூருத்து
வெகண்டிரை வீழ்வதனைத் தம்பிகையி—னன்கெழுந்து
மங்கையிடத் தாரின் வயனிலவுஞ் சொற்றம்பைக்
கொங்கையுறு கோதாய் குறி. (கசசு)

பாங்கிற் பழனவளம் பைந்தொடிக்குக் காட்டிமிளிர்
ஞாங்கரமர் செங்கை நரபதிதா—னுங்ககன்று
போகி யருஞ்சுரத்தைப் புல்லியவ னாரணியைச்
சோகமற வேத்தித் தொழுது. (கசஎ)

ஏகியவ னின்று மிரும்பவத்தை யோப்பிமென்
தாகினியைச் சேனையொடு சார்ந்ததனிற்—றேகையுட
றுணமொடு மூழ்கியரி யானைபுலி யார்வனம்வெற்
போணமிவை யாவுமிகந் துற்று. (கசஅ)

தற்கியற்று நன்றிதனைத் தானறிந்து முல்லைநறும்
பறகிளரப் பற்பநகில் பொங்கவுரிப்—பொற்கதிரை
வானிற்கு நீட்டுமெழிற கோசலமென் மாதுமுக
மான வயோத்தி யணைந்து. (கசகூ)

வானுரிஞ்சு நொச்சி மணிவாயி லின்புறத்தே
நானிறத்து வேதியர்க ளுாலமைச்சர்—தானைவெள்ள
மூதறிஞர் மொய்த்தெதிர்ந்து மாமுகிலி னூர்க்குமுர
சோதையுடன் கொள்ளப் புகுந்து. (கருo)

தோரணத்து வீதியயிற் றெண்டையுறழ் வாய்த்தோகை
மாரரக்கு நீர்சூழ்ந்தி மண்கவிழ்ப்ப—வோரிகந்து
பூசுரர்பொற் கும்பமெதி ரேந்திவரப் பொற்கோயி
லாசறுநாட் புக்கா னமர்ந்து. (கருக)

அன்றினர்கண் மார்பமகழ்ந் தாவி குடித்தொளிரும்
வென்றிவடி வேற்கையரிச் சந்திரனுங்—கன்றணிகைப்
பூவையுமோ வாதினிது புல்லியமர் போழ்துற்ற
பாவையயிற் கர்ப்பம் படர்ந்து. (கருஉ)

வேலனைய கண்குழிய மெய்ந்நரம்பு பைத்தொளிரப்
போலனைய மென்றேட் பொலிவகல—வாலசடு
வீங்கவிடை தோன்ற விளர்ப்பமுக நங்கைநகிற்
கோங்கின் முகங்கறுத்த கூர்ந்து. (கருஙு)

பன்னுமதி பத்தும் பட்டர்ந்ததற்பின் சந்த்ரமதி
நன்னரமர் நாளொடுகோ ளில்யோக—மின்னவைநன்
குற்றதினத் தீன்று ஞாலகுவப்ப வோர்மகனைப்
பொற்றாளஞ் சங்குயிர்ப்ப போல். (கருச)

பெற்றான் மட்டவரலான் பிள்ளையெனாச் சேடியர்வல்
லூற்றார் கழற்பதந்தாழ்ந் தோதுதலும்—வற்றாத
வோகை நெடும்புணரி யுட்டிளைத்தோன் றார்க்கடந்த
வாகையரிச் சந்திரனா மன். (கருரு)

சத்தியஞா னானந்தன் சார்தளியிற் றான்சிறப்பு
மெத்தியவன் பாணிகழ்த்தி வேதியருஞ்—சத்தமுதற்
றந்திரத்திற் றேர்ந்தவருந் தாம்வெறுப்ப வொண்ணிதியந்
தந்திபரி பூணடுகிலுந் தந்து. (கருசு)

வெய்யசிறைச் சாலைநின் றும் வேந்தனாக்கால் யாப்பகற்றிக்
கையசல மாநெடுந்தேர் காணிகொடுத—துய்கவெனப்
போக்கிக் கறைவிடுத்துப் பொக்கசத்தின் றாட்டிறந்தே
யாக்கமிலார் கொள்கெனவிட் டார்ந்து. (கருஎ)

சுண்ணமொடு தூநெய் விழாவெடுப்ப நல்நகர்க்
கண்ணமர்வோ ரெல்லாங் களிதூங்க—வண்ணமறை
சாற்றுமர பாற்சேய்க்குச் சாதகமா திச்சடங்கை
யாற்றி யகத்தா னமர்ந்து. (கருஅ)

விந்தமலை வீறடக்கு மெய்த்தவன்பின் னுற்பவித்த
வந்தணன்முன் றோராசி யாங்குறைத்து—மைந்தனுக்குப்
பேர்தேவ தாசனெனப் பேசமகிழ்ந் தேமகளைத்
தார்மார் பெடுத்தணைத்துத் தான். (கருகூ)

எண்ணரிய வின்பமடைந் நேந்திழையாள் கைக்கொடுத்துத்
தண்ணிலவு வீசுமணித் தாமம்பொன்—னண்ணனாரண்
சுட்டி சதங்கை சுதற்கணிந்து மின்மணிப்பொற்
றொட்டிலின்க ணேற்றிநன் றாட் டூழ்ந்து. (கசு0)

மின்னுமதி யோர்நான்கிற் சந்தி மிதிப்பித்தங்
கன்னமதி யாறி லமர்ந்தூட்டித்—தன்னொருசேய்க்
காண்டதனிற் கேசவினை யாற்றி மகன்றவழ்ந்தே
யீண்டுசிறு கைநீட்டி யீர்த்து. (கசுக)

அளாவியகூ ழாரமிழ்தி னாயிழையோ டார்ந்து
குலாவிவிளை யாடமகிழ் கூர்ந்தே—யெழாவெனப்பே
சின்குதலை கேட்டின்ப மெய்திப் பயில்வித்து
நன்கலைக ளையாண்டி னன்கு. (கசுஉ)

ஆறும் பருவத் தருமகற்கு முப்புரிநூல்
வீறா ரணவிதியின் மேவியிட்டு—மாறா
மகிழ்வுற்றான் சேயேழ வயதணைந்தா னன்னா
ணிகழ்வுற்ற சொல்வா னிரந்து. (கசுங)

விவாககாண்டம் முற்றிற்று. ஆ. கஅசு.

---

## இந்திரகாண்டம்.

---

அற்பகலுஞ் சாரா தவிர்கனக லோகத்தே
பொற்பினம ராவதிப்பேர்ப் பூம்பதியிற்—சிற்பநன்னூல்
வல்லமய னோர்ந்து வகுத்த சுதன்மையெனு
மல்லலணி மண்டபத்தின் வாய். (க)

மின்னுமணி மேகலையார் மேவியிரு பாங்கரினு
மன்னுமெழிற் சாந்தாற்றி வார்கவரி—பொன்னலர்க்கைக்
கொண்டசைப்ப வெள்ளைக் குரூஉமதித் திலக்குடைமேன்
மண்டு நிழல்செய்ய மற்று. (உ)

சூதரொடு மாகதர்கள் சூழ்ந்து விருதுகளை
யோதநிதி யையந்தருவி னோடுமணி—யோதனமீ
தேனுவிவை கட்கடையத் தேர்ந்தியற்றக் கின்னரர்யா
ழாலுவமிழ் தார்த்தச் செவிக்கு. (ங)

உருப்பசிமுன் னல்லா ரொளிர்மின் கொடிபோ
னிருத்தமெதிர் செய்ய நெறியா—லுருத்திரர்கள்
சாத்தியர்விண் ணோர்கந் தருவர்வசுக் கள்சித்தர்
தீத்தவரெல் லாம்பரவ சேர்ந்து. (ச)

கோவைமருள் வாய்நெடுங்கார்க் கூந்தற் சசிமருங்கு
மேவமணி மோலிசிர மீதிலங்கக்—கோவினிறை
கொய்தபடை கையிற் குலவநறுங் கற்பகத்தின
மொய்துணர்த்தார் ஞான்றசைய மொய்ம்பு. (௫)

சீற்றக் கடாச்களிற்றைச் சென்னிபிளந் துண்ணுமரி
யேற்றி னெருத்தமுறு மாதனத்தே—வீற்றிருக்கு
மாயிரநீள் கண்பூத்த வாகத்தா னோர்ஞான்று
பாய வவைககளத்தார்ப் பார்த்து. (௬)

பூவுலகி லின்சொற் பொறைவாய்மை வெஃகாமை
யீவளிசெங் கோன்மை யிழுக்கினடை—தீவினையை
நாணலறி வாண்மைபுகழ நற்கல்வி வீரமுளா
ரேணமர்தோள் வேந்தர்க்குள் யார். (௭)

என்று வினவினனுங் கேளையர்வா ளாவிருப்பத்
துன்று தவவசிட்டன் சொற்றவெலா—நன்றுடையன்
றன்னே ரிலாதவரிச் சந்திரப்பேர் மன்னவர் கோ
னென்ன விறுத்தா னினிது. (௮)

அன்னதவன் கூறலுமே யன்றுமனக் கௌசிகன்றான்
கொன்னும் வசிட்டாவிக் கோபதிமுன்—னெங்கலமும்
புல்லானைப் பொய்யுரைக்கும் பூரியனைப் பாதகனை
நல்லா னெனநவின்ற தென். (௯)

என்றான் மறைவசிட்ட னீனமுறு செய்கைகுணந்
தன்றாத தூயோனைச் சாலவிகழ்ந்—தின்றுமெங்
கோசிகவாய் வெந்திலையே கோள்புகனீ வெந்திலையே
யேசிறெய்வம் பொய்த்ததன்பா லென்று. (௧௦)

செப்பியவம் மாற்றஞ் செவிசுடலுங் கௌசிகன்றான்
றப்பியம்புன் வாயே தவப்புழுக்கு—மெப்பொழுது
மெய்கழறென் வாய்மனமும் வேவலகா னென்றறைந்தான்
வெய்தழல்போற் சேந்து விழி. (௧௧)

குணமென்னுங் குன்றேறி நின்ற வசிட்டன்
கணமல்கு காட்டி னடிக்கு—மணவி தழிச்
செஞ்சடையன் போற்கண் டிசைகடொறுந் தீத்தெறிப்ப
வெஞ்சினமுட் கொண்டெழுந்தான் வேர்த்து. (கஉ)

தாங்கலனாய்க் கௌசிகனுந் தன்னுளத்திற் சீற்றமுருத்
தோங்கவிழிக் கங்க முருத்திட்டா—னாங்கவிரு
பாவினூறு செங்கனலி பம்பிச் சுவாலித்து
மேலெழுந்து போய விறந்து. (கந)

பொங்குதழல் போகிப் புனிதமறைப் புங்கவன்றன்
றங்கு முலகதனைத் தாக்கலுமே—மங்குலிவர்
வென்றிக குலிசத்தன் விண்ணோடுமண் ணென்படுமோ
வென்று நடுங்கி யெழுந்து. (கச)

அன்னமுனி வோர்சினத்தை யாற்றிநனி தேற்றியுள
மென்னைசெயத் தக்க திழிதக்க—துன்னியுனா
யாடுமின்வென் றுற்றேற்று லந்தணிர்நீ ரென்றவனை
நாடி யிசைத்தா னயந்து. (கரு)

சான்ற பராசரன்மூ தாதையரிச் சந்திரன்றன்
மான்று மனம்பணைப்பின் மற்றிவனே—லென்றதவம்
விட்டுமண்டை யோடேந்தி மேவுவன்யான் றெற்கினெனக்
கட்டுரைத்தா னெஞ்சங் கனன்று. (கசு)

இன்னிசையாழ் மீட்டு மெழினா ரதமுனிவ
னங்கிலையிற் காதி யளித்தமகன்—றன்னைமுகம்
பார்த்து வசிட்டன் பகர்சபதங் கேட்டனைகொ
லோர்த்துளநீ யோதென்றா னுற்று. (கஎ)

சத்திமுத லோர்ப் பயந்தோன் றானுறுவன் வென்றியெனின்
மெய்த்தவத்திற் பாதி விழைந்தளிப்பன்—கத்தலனால்
யானு மவன் போற் பெரும்பாடை யென்றிசைத்தான்
வானிறைமுன் கௌசிகனு மற்று. (கஅ)

சாலுமிஃ தேர்தலரிச் சந்திரன்பாற் சாற்றுமே
யேலவிவ னுற்றவெலா மேகியினி—நாலுசடைக்
கோசிகநீ யன்றேன் குணஞ்செயலைச் சோதியெனப்
பேசினனற பேர்யாழ் முனி. (௧௯)

ஆங்கச் சபைகுலைய வைந்தவித்த வந்தணர்க
ணீங்கித் தமதிருக்கை நேர்ந்தனர்மேற்—றீங்கிழைப்ப
வுன்மனத்தான் கௌசிகனு முற்றுன் முனமமர்ந்த
பொன்மலைநீள் சாரற் பொழில. (௨௰)

இந்திரகாண்டம் முற்றிற்று. ஆ ௨௰௬.

## வஞ்சனைக்காண்டம்.

பொன்மலைநீள் சாரற் பொழில்புகுந்த கௌசிகன்யாம்
பொன்மலிநா டாளும் புருகூதன்—முன்மனமோங்
கவ்வியத்தாற் பேசுற்ற வம்மொழிமெய் யாக்கிடுமா
றெவ்வகையென் றோர்ந்தா னிருந்து. (௧)

இருந்தவிடத் தந்த விருடிதனைக் காண்பா
னருந்தவரெண் ணில்லா ரணைந்து—பொருந்துமன்பிற்
சென்னி யவனடியைத் தீண்டமணில் வீழ்ந்தெழுந்து
மன்னி மருங்கு மகிழ்ந்து. (௨)

முக்குறும்பை வென்ற முதல்வாநீ விண்ணுலகம்
புக்கபின்றை யாங்குப் புகுந்தவெலாந்—தொக்கவெமக்
கொன்று மன்பி னொன்றும் விடாமே யுரைத்தருளா
யென்றவனை வேண்டினான் றே. (௩)

சுத்தநெறி தேர்விச் சுவாமித் திரமுனிவன்
இத்தகக ளுற்றதொன்றும் விள்ளாதே—மெய்த்தவத்தீர்
தேவரவைக் கட்பெரியோர் தேர்ந்தமகத் தோருவேள்
வரவலினீண் டாற்றவடைந் தேன். (௪)

நீயிரெலா நெஞ்சுவந்து நேரிலரிச் சந்திரன்பாற்
போயரிய வேள்விக் கியான்புகல்வ—தாயபொரு
ணல்கும் வகைபொருந்தி நண்ணுதிரா லீண்டென்னாச்
சொல்லினனோர் வஞ்சனையுட் சூழ்ந்து. (௫)

நேர்ந்ததற்குப் பற்றிரண்டு நீத்தவர்க ளெல்லோரும்
வார்ந்தவரைச் சைலம் வனநதியைச்—சார்ந்தகன்று
பொன்னனையார் பந்தாடும் பூம்பொழில்சூழ் கோசலமா
மன்னவையிற் புக்கார்கள் வந்து. (௬)

வந்தமுனி வோரை வணங்கித் தவிசிருத்தித்
தந்தமத யானையரிச் சந்திரன்றான்—பந்தமக
லந்தணர்கா ளீண்ட னடைந்ததிறஞ் செப்புமெனாச்
சிந்தைமகிழ்ந் தோதினன்முன் சென்று. (௭)

கற்பகமு நாண்மலர்க்கைக் காவலகேள் வாசகமொன்
றற்பினொடு கௌசிகனம் தாடினனாற்—பொற்புறுநீ
யீய வதுதுணிந்தா லின்னதெனச் சொல்வமென
வாய்மலர்ந்தார் மாதவர்கண் மற்று. (௮)

ஆருயிரோ யர்னு மணிக்குலல்யா னெஞ்சுவந்து
பேரறிவாஞ் செல்வம் பெரிதுடையீர்—நீரியம்பு
மப்பொருளுண் டாமெனினல் சாதொழிவ னோவென்றான்
றப்புணாயாத் தாரிறைவன் றான். (௯)

வானவர்க்கு மண்ணவர்க்கும் வாயாத வோர்வேள்வி
தானியற்ற வெண்ணினம்யாஞ் சாற்றுமதற்—கானபொருள்
வேண்டியுனை மேவினமால் விண்ணுறழ்கை வேந்தவென்றார்
மாண்டதவத் தோர்வாய் மலர்ந்து. (௧௦)

போதப் பெரிதே புகலும் பொருளெனினு
மீதவெனக் கியல்பா மென்றிசைத்துக்—காதயில்வேற்
றானையரிச் சந்திரன்றன் னேவலர்க்குச் சாற்றியிட்டா
னீனமில்பொன் கொண்டணைதி ரென்று. (௧௧)

இன்றிவ் விருந்தியம் வேண்டலம்யாம் யாகமியற்
றன்றளிகக வென்றறைந்தா ரந்தணர்க—ளன்றெனவே
மன்னனிசைத் தானவனை வாழ்த்தித் தபோதனர்க
ளந்நகரைத் தான்விட் டகன்று. (௧௨)

வல்விரைந்து பஃறிணையும் வார்கடமு நீந்திவினை
வெல்விசுவா மித்திரன்றன் மேவுடசம்—புல்லியவற்
போற்றியரிச் சந்திரன் பொன் னல்கவ்வைசந் தாவெனவே
சாற்றினர்சென் றூர்தமது சார்வு. (௧௩)

தீயமனக் கௌசிகன்றன் றிங்கள்சில சென்றதற்பின்
கூயகலப் புட்களதர்க் கட்குளமீன்—பாயநெடுங்
காவலர்கண் ணீருறைப்பச் செங்நெற கதிர்பனிப்பத்
தாவிலயோத் திப்பதியைச் சார்ந்து. (௧௪)

மந்தரவெற் பன்னகொலு மண்டபத்தி லெய்தவரிச்
சந்திரன்சென் றம்முனியைத் தாளிறைஞ்சி—யந்தமணி
யாதனத்தின் மீதிருத்தி யையாநீ வந்ததிப
மோதுகென்று னுள்ள முவந்து. (௧௫)

சந்திமுத லூற்றுவரைத் தான்செகுத்த வெய்யமுனி
மெய்த்தமறை வேள்விக் கியான்விடுத்த—வத்தவர்க்கு
நீயிசைந்த வொண்பொருளை நீதியிற்பூ வாளுகிற்போ
யீயெனக்கிங் கென்றியம்பி னான். (௧௬)

சகுவல்யா னின்னினியே யெத்துணைப்பொன் வேண்டுமது
போகு நெடுஞ்சடிலப் புண்ணியனே—யோகையினீ
வாய்மலரா யென்றிறைஞ்சி வாழ்த்தினன்வண் டேநறாப்
பாய்மலர்த்தார் வேந்தர் பதி. (௧௭)

யானைமிசை நின்றே யெறியுங் கவண்சிலைதான்
போன வளவு பொருள்குவிப்பி—னீனமறு
மாமகத்தை யாற்றிடலா மன்னவனே காவெனன்றான்
றீமனத்துக் காதிமகன் றேர்ந்து. (௧௮)

அவ்வகையே நல்குவன்யா னையா வெனமொழிந்து
தெவ்வர்முடி தேய்த்துத் திகழ் கழலா—னிவ்வுழிநீர்
வாரணத்தைத் தம்பிரென வாதுவர்க ளோடிப்போ
யோரிமைக்குட் கொண்டணைந்தா ரீங்கு. (௧௯)

கண்டா னிபங்களித்தான் கௌசிகன்பின் பண்ணலைப்பார்
தண்டா ரரியிசைந்த தேயமைய—மண்டோமஞ்
செய்ஞ்ஞான்றீ நின்பாலென் செம்பொ னடைக்கலமா
விஞ்ஞான்று வைத்தனன்கா ணென்று. (௨௦)

செப்பித் தனதிருக்கை சென்றோர் வியன்றருவின்
கப்புநிழற் கணையமர்ந்து கண்ணினனு—லிப்புவிமே
லூர்வனபுள் வெவ்விலங்கு முன்னவையு மொலலையிவட்
சார்கவெனத் தன்னுளத்திற் றான். (௨௧)

அக்கணத்தி லாகு வணில்கிமுன் னூர்வனவுங்
குக்கில் கொடிகிளிபூழ் மஞ்ஞைமுதற்—பக்கிகளு
மத்திபுலி யெண்கரியெய் யாமாமான் முன்விலங்கு
மொய்த்திருடி முன்னணைந்து தாழ்ந்து. (௨௨)

எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு மெந்தாய்நீ
துவ்வுமிரை காளிற் றரீஇப்பசியாம்—வெவ்வடவை
தீரப் புசித்துத் திரியுமெமை யின்றீண்டுச்
சேரப் புரிந்தமையென் செப்பு. (௨௩)

என்றலுமக் கௌசிகனீ ரேர்தலரிச் சந்திரனுட்
டொன்றுமுயி ரோடுபெயி ரோங்குபொழில்—சென்றினியே
வேரினுட னேகளைந்து வெய்தெனவீங் கெல்லீரும்
வாருமென வேவினன் மற்று. (௨௪)

ஆங்கவவைதா மருந்தவனைத் தாள்வணங்கி
நீங்கிவிரைந் திந்திரனூர் நீளூர்தி—தாங்குமலர்ப்
பொங்கரொடு பொற்கதிர்நீள் பூம்பணைசூழ் கோசலநா
டெங்குமடர்ந் தற்றழித்த வே. (௨௫)

அந்தவள நாட்டி லமர்ந்துறைவோ ரெல்லாருந்
தந்திமுதற் கான்விலங்கு சார்ந்தியற்றும்—வெந்தொழிலைக்
கண்டுமன மழுங்கிக் காவலயோத் திபபதிபுக்
கண்டியரிச் சந்திரன்முன் பார்த்து. (௨௬)

தண்டனிட்டு நின்றெம்மைத் தாயிற புகன்றளிப்போய்
மண்டுமிடித தியவிசகு மாமுகிலே—யண்டலர்கள்
கோளரியே நம்முடைய கோட்டத்தே மாவினத்தின்
நாளணைந்த வோதுகங்கே ளென்கு. (௨௭)

சிற்றுறவி யாகுவணில் செற்பதங்கம் பூழ்துரிஞ்சி
னற்றுவர்வாய்க் கிள்ளைமயி னவ்விமலா—மற்றெறுழி
தாழ்பனைக்கை யானைகவி தாசோகஞ் சோலையொடு
பாழ்படுத்த பைங்கூழ் படர்ந்து. (௨௮)

காவலிருந் தோரையெலாங் கங்குலிடைத் தேள்செய்யான்
றீவிடநா கந்தீண்டிக கொன்றனவாற—றுவுபுலி
யாளிபல்லங் கோணாய்க ளானிரையோ டோட்டுநரை
மூளையுண்ட வந்துபற்றி மொயத்து. (௨௯)

இந்நிலைக்க ணெம்மையெலா மீசாநீ காத்திலையேற
கொன்னுணவே யாயேங் கொடுவிலங்கிற—கென்னலுங்கேட்
டஞ்சேன்மி னென்றியம்பி யத்தன்வினை யாட்டையுற
நெஞ்சுருடு கோமா னினைந்து. (௩0)

இல்லுமக்கீ ராண்டுக் கிறையென் றவர்நமக்கு
நல்லதுகில் செம்பொனணி நல்கிநும்மூர்ச்—செல்லுமென்று
னன்னகுடி மக்க ளனைவருந்தம் மூரணைந்தார்
மன்னன் மலர்த்தாள் பணிந்து. (௩௧)

வஞ்சனைக்காண்டம் முற்றிற்று. ஆக ௨௩௭.

## வேட்டஞ்செய் காண்டம்.

நாட்டவர்கள் போயபின்றை நளளலருன் பாற்றினத்திற்
கூட்டுமயில் வேலிறைவ னோக்கணின்று—காட்டுவிலங்
கீண்டிப் புரிகொடுமைக கென்செயலாங் கூறுமென்றான்
மாணட மதியமைச்சர்ப் பார்த்து. (௧)

ஆண்டளப்பா னன்ன வமாததியர்கை கூப்பினர்நின்
றாணடைகைநீ யத்தமற வேடுவர்நா—யீணடுகணத
தோடணைந்து வல்லை யுயிாசெகுததே மாவினததை
நாடளிகக வென்றா நயந்து. (௨)

அந்தமொழி கேளா வதிர்கழறகான் மன்னவர்கோன்
வெந்தறுகண் வில்வேடர் தம்மையெலாந—தந்திடுமி
னீங்கிமைககு முன்னீவி ரேகுயென விணடனறை
பாஙகினின்ற தூதுவரைப் பாாததது. (௩)

தூதர் தொழுது சுடர்ப்பகையி னோடிப்போய்க்
காதுழுவை தோலரிவாழ காணெஙகு—மாதுதரீஇக்
குன்றவரைக் கண்டாயன் கூறியிட்ட கற்பனையை
மன்ற வவர்ககிசைததா மன். (௪)

அக்காலைச் செவவே ளமாநிலததெய பாலினின்று
மைககார் வடிவத்தர் வார்ந்திடுதங்—தககாதா
பீலிதிகழ் சூட்டினர்கள் பேரழல்கால் கணணர்கணி
மாலை துயல்வருமார் பர். (௫)

முழவுறழ்தோ ளேந்துமுனை மூரிச் சிலையா
ரழலவிடம்பில் கம்பிடுமா வததர்—கெழுவிலுடை
வாளர் மருங்களைசெங் கச்சர்தொடு தோலணிந்த
தாளர் கணககிறந்தார் தாம். (௬)

போந்தின் கருக்கெயிற்றுப் போகு முகச்சுருள்வாற்
பாய்ந்துகுரைத் தேகடிக்கும் பாசியின்—மோந்துவரத்
தொண்டகத்தின் கூட்டந் துவைப்பக் கருங்கடல்போற்
றண்டனிட்டு வேந்தனெதிர் சார்ந்து. (௭)

நின்றொழுங்கை யாவெம்மை நீயழைத்த காரணமோ
தென்று மறுவலுமன் னில்விழுந்தா—ரன்றவர்கள்
வத்திரஞ்சீர் மூவுலகும் வைத்த பிருதுமகன்
புத்திரன்று ரேுக்கிப புரிந்து. (௮)

வாவன் முதற்ககமும் வாலெலிமுன் னூர்வனவும்
வாவுமரி யாதிவன மாக்களுந்தாங்—காவிறொடு
பைங்கூழை நாடணைந்து பாழ்படுத்த லானவற்றை
யிங்கேகி முன்னிகுமி னின்று. (௯)

யாமு நமக்குதவி யாக வருதுமென
மாமணிப்பூ ணுடை வழங்கிநனி—யாமவர்க்கு
நல்கிவிடை பின்னமைச்சர் நாடியணி கத்தொடுநீர்
செல்கவினாங் தென்றியம்பித தேர்ந்து. (௧௦)

மண்டபத்தி னீங்கி மனைபுகுந்து மெய்ச்கவசங்
கொண்டுடுத்துச் சாமநிறக கூறைமணி - மஞ்சிமுடி
சூடியுடை வாளவீக்கிச் சூலிதரு வில்லேந்தி
யீர்றுமம் பாவமுது கிட்டு. (௧௧)

பைங்கழைதோள் வெண்டரளப் பற்கருங்கட் செந்துவர்
பொங்குசுடர்ப் பொன்வடிவப் பூவையொடு-சங்கலறக் [வாய்ப்
கொய்யுளைமான் யாத்த குவடனைய பொற்கொடிநீள்
வையமிசை வல்லை யிவர்ந்து. (௧௨)

காற்படைமுன் னண்ணவெழு பூழ்தி பதாகைநிரை
காற்பெறுமுக் கந்துடனே வெண்கவிகை - மேற்பகலை
மூடி யிருடோறற மெய்யரச ராமுடி
நீடிமணி காட்ட நிலா. (௧௩)

மஞ்சுறங்கு நீண்மாட மாலை நிகழ்மறுகி
னெஞ்சுகளைய வூர்ந்து நெசிநகரத் - திஞ்சிமணி
வாயில் கடந்து மறவர்படைக் காக்கடலைப்
பொய்யனைத்தான் பாணமலை போக. (௧௪)

வேந்தர் பிரானையடி வீழ்ந்திறைஞ்சி வெங்கொலைஞர்
போந்து பரந்தகனி பூம்பொழிலின் - ரார்ந்தநட
மெங்கும் வலைபிணித்து வாரொழுகி யேகுபம்பை
யைந்த விரலை துடி. (௧௫)

முழுகிப் பிணிப்பகற்றி மொய்ஞ்ஞமலி யேவி
யுழைசகுலமா மாக்கட லைம யோரி - புழைக்கையிபஞ்
சேழறாக் கெண்குகவி கேசரிமுன் வெவ்விலங்கு
சூழுமலைகுளை மேவத் துரந்து. (௧௬)

எய்தெறிந்து குத்திச் செகுத்தனரான் கெண்ணிறந்த
மொய்சிறைய புள்ளு முரணிலங்கும் - பெய்கழற்கான்
வேந்தர் கவணைசிலையும வெள்வேலுங் கொணடிகுத்தார்
வீழ்த்தபிணை வெறபெழுந்த வினை. (௧௭)

செயிரிற றலைப்பிரியாக் காட்சிச் சிலவு
ருயிரிற் றலைபிரித ஆனே - வயிரமெழுந்த
வங்கி தனிய புறமொசுக்கி நாய்கருபட்டுத்
துங்கமடு நீர்பருகித் துய்த்து. (௧௮)

வந்துமணி மௌலிபுனை மன்னவர்பன் முன்பிறைஞ்சி
யெந்தையினி யெங்களுக்கே யென்னைவிதி - யிதவிடத்
துறவிலங் குட்சிலவ வைத்தகனை வேலபனைததுச்
செற்றவலை சேணகன்ற வென்று. (௧௯)

விருயினர்கள் கேட்டிறைவன் வேடுவரை நோக்கி
யெருதுகருத் தின்றவிலங் கெல்லாம் - விநாசமுறச்
செய்தலைகள் சென்றதிசை தோறனுப்பி பின்னகரி
யெய்துவதென் றேறியுய்த்தால் தேர். (௨௰)

கோன்பதுமத் தாள்வணங்கிக் கோட்டுசிலைக் கைக்குறவர்
கான்படர்ந்து காத்தவடார்ப் பேபற்றி - மான்பறவைக்
கூட்டமெலாங் கொன்று குறுங்காட்டைச் செங்கனலிக்
கூட்டினர்க ளொல்லை யுவந்து. (௨௧)

செந்தழற்குத் தப்பிச் சிலமிருகம் பாய்ந்தோடி
முந்துதமை யேய முனிவனெதிர் - வந்தவிழக்
கண்டவனுட் பொங்கிக் கணக்கிலமா விட்டனையீண்
டண்டினவைக் தாறென்கொ லென்று. (௨௨)

எண்ணி யிளைந்ததன்பா லெய்தியவவ் வெவ்விலங்கைக்
கண்ணுறறஞ் சாதிரெனக் கைடமைந்து - நண்ணியவட்
செயததக்தார் வேர்தனுலமச் செய்ததீர் செப்புமென
வைதளைத்துஞ் சொறற வவை. (௨௩)

அந்தமொழி கேட்டறவோ னங்கி விழிதுணைகள்
சிந்த விழிததுச் சிரிதுதுகளை - கந்தமுணர்
நாசிமிசை வைத்தே சரயு நதியொழுகு
கோசலமா மன்னையெல்பாக கு. (௨௪)

மன்னி யகல்விசும்பி னுள்ளாரும் பாரசழ்ந்தோர்
முன்னெடுங்கோட் டேநதியமால வன்றியோ - மன்னுயிரைக்
கொன்றுணும்வெங் கூற்றமுரட் கோலவுருத் தாங்கியதோ
வென்றயிர்ப்பங கெய்த வுளத்து. (௨௫)

பொன்னுருவம் புட்பாரா கத்தைப் புரைமிடறு
மின்னுமணிச் செவ்விழியும் பைம்முகமுங் - துன்னுபிறை
நேரெயிறுங் துப்படியு நீல நிறக்குரமுஞ்
சரோருழி தன்றவத்தாற் றாது. (௨௬)

நோக்கியதை நீசென்று நோன்கழற்கால் வீரரொடு
தாக்கிச் சிலையெயினர் தம்முயிராப் - போக்கித்
திரிசங்கு பெற்றெடுத்த செல்வனைத்தான் கொணடு
விரைவிங்கு விட்டேகென் றான். (௨௭)

அந்த விருடி யடிவணங்கி யக்கணிது
வந்தெனச்சென் றங்கரையன் வாகினியோ - டேந்துகை
விற்புளிஞர் தம்மையெலாம் வீட்டியவ் வெயிற்றுத்
தம்பெயர்த்தோ டிற்றுக் கறை. (௨௮)

தப்பியொரு வேடன் றராபதிதாள் சென்றிறைஞ்சிச்
செப்பினனஞ் சேனையெல் லாஞ்சிதைத்த - தொப்பிலா
வெய்ய வராகமொன்று மேவியவட் டேரினைநீ
யைய திரித்தருள்க வென்று. (௨௯)

சொற்ற வுரைசெவியிற் றோய்தலுமே மன்னவர்கோன்
செற்றமனத் தோடகச் சிரித்ததின் றீண் - டிற்றவர்தம்
மாவியின்மேல் வைத்தேகும் மாவயெனுக் கையெடுத்துத்
தேவிதரு செம்பொற் சிலை. (௩0)

தங்கச் சயந்தனத்தைச் சாரதிவல் லூரப்போய்த்
துங்கக் கரிபரியைத் தூளாக்கி - யங்கெதிர்ந்தே
சார்தருவெங் கேழற் றடந்தன்மே லுய்த்திட்டான்
கோரதுகோ லொன்று குறித்து. (௩௧)

உய்த்தகணை யோசனையோர் பத்தகப் பாற்கொடுபோய்
வைத்தடலும் பைங்கழைநீள் வான்கிரிமே - னைத்தவுட
னொன்றுதிரஞ் சோர நெடுங்கிருட்டி கௌசிகன்பாற்
றன்றவழுந் தங்கோடிற் று. (௩௨)

சிதறுண்டு போய படைஞரெலாஞ் சேர்ந்து
பதமத்தாள் வந்து பரவ - வதிபன்று
வஞ்சாதி சொன்னவங் கையமைத்துத் தேர்நடத்திச்
செஞ்சோரி வார்களத்தட் சென்று. (௩௩)

தேரினையவட் பட்ட புதுமை தெரிசித்தே
யேனமதைக் கொல்லவுளத் தெண்ணியது - போனதிசை
கார்க்கவடு பற்றிப்போய்க் கானம் பலபுகுந்து
மேற்செறிய தூளி மிக. (௩௪)

போர்த்தினைத்தான் சைவமும் பொற்பிரச முண்டகமுங்
கார்த்திமிரு காவியொடு ஞாளிகமு - மார்த்துமிறுஞ்
செய்ய குமுதமுந்தே டாமைவாரால் சக்குறவாற்
றுய்யனிகர் தெண்ணீர்த் தடம். (௩௫)

மண்டலத்திற் பாயிருளை வாரியுண்டு செங்கரத்தால்
விண்டலத்தின் மேவருக்கன் வேந்தர்பிரா - னண்டாதஞ்
சென்றெழுந்து தன்மெய்ச் செறிந்ததுகண் மண்ணவுற்றான்
றன்றுகுட முந்நீர் துளைந்து. (௧௬)

பின்றொடர்ந்த மந்திரிமார் பின்னிடையாத் தானைமன்னர்
வென்றியரிச் சந்திரனு மேவூர்தி - நின்றிழிந்து
பொய்கைநறு நீர்குடைந்தண் டாதிப்பூ ரித்திருந்தார்
மைதுலவு பூம்பொதும்பர் வாய். (௧௭)

சீதவனங் கொண்மார் சிலமுனிவ ராங்கணைந்தார்
காதயில்வேற் றானையொடு காவலற்பார்த் - தோதினரீண்
டாதவெவன் போந்தா யடலைசெயுஞ் சாபத்தாற்
காதிமகன் கண்டக்கா லென்று. (௧௮)

என்னவ் வடிகட்குச் சிற்றமடி யேனிடத்துக்
கொன்னுமவர் இயான்குயின்ற குற்றமற்றுண் - டென்னி
னவைதிருத்திப் பின்ன ரகல்கைகட னென்றாக்
குவிகரத்தோ டாங்குரைத்தான் கோன். (௧௯)

மன்னிசைத்த மாற்றமது மாதவத்தோர் கேட்டனர்கள்
பின்னிகழ்வ காண்டியெனப் பேசினர்கண் - மன்னவன்றான்
பின்பிரவு துன்னப் பிரியையொடு கூடாரத்
தன்பினுற்றுக் கண்வளர்ந்தா னவ். (௨௰)

தாதவிழ்தார்ப் பார்த்திவர்கள் சார்ந்தறுவை யிற்றுயின்றார்
பாதவத்தின் கீழ்த்துயின்ற பாய்பரிதேர் - வாதவன்பூங்
காவிற் றொழுகியெழக் கங்குலறத் தோன்றினனீள்
பூவி மனாமலர வந்து. (௨௧)

சேனையொடு தேரரசர் யாருமுணர்ந்தெழுந்தார்
வானமணி வாய்க்கனவி லுள்ளமெழுந் - தானுலவு
மீனவிழி மெல்லியலாள் வேந்தனச்ச மோர்ந்திறைவ
னானதிற னிற்கெவ்வென் றான். (௨௨)

வானமிழ்த நாணுமொழி மானே நெருநலிரா
வூனமுறு மோர்கனவு கண்டுணர்ந்தேன் - யானென்
றிறையளித்தது நா தனாவேந் தேயினனா லோலை
யிறையினிவட் டந்திடுதி ரென்று. (௪௩)

இமைப்பினிலந் தூதுவர்தா மேகியழைப்ப
வமைச்சரொ டோலையை யணுகி - பெருமாக டீன்
ளடப வழுசதபரி சென்னருக வென்றரசன்
செய்யகழல் போற்றிநின்றார் சேர்ந்து. (௪௪)

அந்தநிலை மற்றவர்ப்பார்த் தன்னவலனை படைந்த
தந்தைதனு வோவினை சார்ந்தவணின் - நந்துமை
தாரகைலோ கத்தே தவிர்ந்தபின்னு னைந்தும -
வானொழியங் காவிருந்தே னூல். (௪௫)

யானே யருந்தவத்தோற் கீந்தனனோர் பேதையைப் போய்த்
தானே யொருத்தியவற் சார்ந்தனனா - டானறமோர்
மாதகன்றார் கணணிருந்தான மற்றொருத்தி நின்றனளோர்
கோதை யுறுதி கொய்த்து. (௪௬)

இன்னணமையா னென்ன விராக்கனவி னேன்சண்ட
ரென்ன வினிவிளையு மோவறியேன் - கொன்னுயிர்த்தச்
சொப்பனத்தாற் சார்திறனைச் சூழ்ந்துளது நீயிரெலா
மிப்பொழுதிங் கேயுரைச்கென் றான். (௪௭)

ஐயனையங் கத்துடனே யாள்வினைவன் கன்குடிகாப்
பயமறக் கற்றறித லாங்குடையோன் - றுய்யமனச்
சத்தியகீர்த் திப்பெயரோன் றன்பிருது பௌத்திரனைக்
கைத்தலங்கூப் பித்தொழுது கண்டு. (௪௮)

இந்த வினையெல்லா மெழுந்தவிறற் கௌசிகனு
லந்தமுனி யாவணையு மேலாக்க - மந்திரிரு
நாடு நகரிழந்து தங்கைமகன் வெவ்வேறு
மாடவனைப் பின்வேறும் யாம். (௪௯)

என்றறைய மன்னு மெனைமகனை யிந்நாட்டை
வென்றியிபுந் தாளும் விதித்தமுறை - யொன்று
மிழவற்க வென்று விசைத்தா னிறைவன்
கழலரிவை தாழ்ந்து கசிந்து. (௫௦)

கேட்டமைச்ச ரெல்லோருங் கேழ்கிளர்கண் ணீரருவி
காட்டக் கலுழ்ந்தனர்கள் கனமொழிமின் - வாட்டுதய
ரென்றவனைத் தேற்றியினி தேர்தலிருந் தானப்பாற்
றுன்றியவை சொல்வாந் தொகுத்து. (௫௧)

வேட்டஞ்செய்காண்டமுற்றிற்று. ஆ ௨௮௮.

---

## சூழ்வினைக்காண்டம்.

---

குடிதழீஇக் கோலோச்சுங் கோசலநாட் டண்ணல்
விற்பகழி மெய்யதா வோடித் - துடிதுடித்துக்
கோசிகன்முற் றுன்பட்ட பாடனைத்துங் கூறியதால்
வீசெயிறறுக் கோலம் விழுந்து. (௧)

காட்டஞ் சிவந்துறுவ ருசிவிட்ட மூச்சினளிக்
கூட்டுமலர்க் கூந்த லுருப்பசியுங் - கோட்டமுறும்
பொற்பினிரு சண்டாளப் பூவையர்க டோன்றியவன்
பற்பவடி நின்றார் பணிந்து. (௨)

கண்டழைத்துக் காதிசுத னென்னென்ன கலைகளையப்
பெண்டிருக்குப் பெட்பிற் புகட்டினனுங் - கண்டியவற்
றூழ்ந்தறவோர் தொற்றத் தரிச்சந் திரன்றளத்தோ
டாழ்ந்ததடத் துற்றனனென் றார். (௩)

எண்ணியதன் னெண்ணமெலா மீடேறு மென்றேம்ப
லண்ணிமுனி நங்கையர்ப்பார்த் தின்னேபோய்ப் - பண்ணிசை
வாசித்துக் கோமான் மகிசகுடையல் வாற்கலவி [ழ்வாழ்
யோசித்துக் கொண்டுறுக நீர். (௪)

என்றுவிடை நல்கலுமே யேந்திழையார் மற்றவனை
நன்றிறைஞ்சி யேகி நறுங்கமலந் - துன்றிலஞ்சி
மாட்டுறையுஞ் சோதி மணிமகுடக் கொற்றவனைத்
தாட்டுணைமுற் றாழ்ந்துநின்று தான். (௫)

மன்னு நின தெழிலை வண்மைகளைப் பார்த்தியம்பப்
பண்ணுக்க ளுங்கள் படைத்திலமா - லென்று
வியந்துரைத்தார் கேட்டிறைவன் மின்னனையீர் நீர்யார்
நயந்தடுத்த தென்னவில்கென் றான். (௬)

கன்ன லனுக்குமின்சொற் காரிகையார் காவலனே
மின்னெழிலி னாங்கிவ் விபினத்து - மன்னுறும்யா
நீசப் புலைச்சியர்க ணின்கழலைக் கண்டிறைஞ்ச
வாசைப் படீஇயடைந்தே மால். (௭)

புல்லறிவி னோயேங்கள் போற்றிசையாழ் கீதமொடு
வல்லம் வறிநின்று கேட்கவெனச் - சொல்லியெடுத்
தியாழ்மா டகமுறுக்கித் தந்தியினி தேதடவிக்
கேழோ வியத்திற் கிளர்ந்து. (௮)

காரதனுங் கின்னரரு நாணுறப் பட்டமரம்
பாரதனிற் பல்லவங்கள் காட்டநவை - சீரிருந்
தேழிசையும் பாடினார்க ளிந்துமதி யோடுதிரு
வாழகலத் தண்ணன் மகிழ்ந்து. (௯)

அன்மருங்கு லார்வதன நோக்கிமலர்க் கயனமத்தே
பொன்மணிப்பூண் பீதாம் பரமுதவிக் - கொண்மெனலு
மின்னவையாங் கொள்ளியரீண் டெண்ணியடைந் தேமல்லே
முன்னியவை கேட்க வுவந்து. (௧௦)

இல்லையெனு தெண்ணியதோ னேற்போர்க் களிக்குமன்று
சொல்லுமிவை நின்னருளாற் றுன்னிடனே - மல்லிவைபூர்
நிக்கணிகர் நின்றன் செழுங்கவிகை யீந்தருளா
வெங்களுக்கின் றென்று ரெடுத்து. (௧௧)

# சூழ்வினைக்காண்டம்.

தொன்றுதொட்டு வந்த தலங்கு மணிக்குடைய
யின்றுமகவி யான்வழுக்க யாட்டேனீ - நன்றவே
ளொன்றினைநீர் வேணடி னுதவுவன்மன் னென்றுரைத்தான்
குன்றினைநே ரம்புயத்துக் கோன். (௧௫)

கேட்டதனைப் பச்சையிளங் கிள்ளைமொழி யாரிறைவ
மாட்டாய் மணிக்கவிகை நல்கவெனிற் - கேட்டினையைப்
புல்லியெமக் கின்பம புராதருளக வென்றலுமெய்ச்
சொல்லமைச்சன் றேரையர்பபார்த் து. (௧௬)

கொடுப்ப சொடுப்பர் கொடாத சொடாஅர்
விடுப்ப விடுப்பர் விடாத - விடுகிலாத
சொல்லத தலைவனீர் சொல்லி யடப்பகொள்க
வல்லதுமெசல கென்றறைநதா னுங்கு. (௧௭)

வள்ளலென யாமடைந்தேம் வந்திரட்போர்க் கொன்றியாக்
கள்ளனெனக் கண்டால வருத்தமென் - றள்ளிலைவேற்
கண்ணார் புகன்றார் கதமடைந்து தள்ளுமென்றன்
மண்ணாளும் வேந்தன் மனத்து. (௧௮)

கேகயமன் னூர் தம்மைக் கிங்கரர்தள் வாளூறறுக்
தேக நலிங்கியவர் செங்கையின்யாழ - போகவிட்டு
நண்ணரிய காட்டோடி நன்குதிர முட்கீறும்
புண்ணொழுக நெஞ்சழிந்து போந்து. (௧௯)

விட்டவிறற் கௌசிகன்முன் வீழ்ந்தலறி யாங்குத்தாம்
பட்டவிட ரெல்லாம் பகர்ந்தனர்சேட் - டட்டபுல
வாழ்க்கையன்வெங் கோப மனதெழக்கட் டீத்தெறிப்ப
மீக்குலவேற் றிற்சிரிதது வேர்த்து. (௨௰)

வேகத் துடனெழுந்து மெய்த்தவத்தோர் சூழ்ந்துவரப்
பூகத்தின் வாளையுகள் பொய்கையின்மாட் - டேகினன்கண்
டாங்கிறைவன் சென்றெதிரி லந்தணவென் கோபமெனுத்
தாங்கினன்கம் மேலவன்பூர் தான். (௨௧)

மாக்களைமுன் சொன்றாய் வராகத்திற் கூறுசெய்தாய்
பூக்குழலென் காதற புதல்வியர்தம் - வாக்கிலேழும்
பாட்டைப் பழித்தாய பபோவி நியென்றான்
கேட்டைக் குறித்தமுனி கேட்டு. (௧௯)

காவேகர் பூம்பொழிலை நாசப் படுத்திடினு
மீடுடைய நீவிடுதே நா யென்றறிந்தா - னீங்கலை [யைத்
தூய்விலங்கை வீட்டுவதோ தொலைவிலையேன் செய்பிழை
தாயைநிகர்த் தாயபொறுக்கென் றான். (௨௦)

வேந்தனுரை காதிலுற விச்சுவா மித்திரன்றான்
சேந்தவிழி நோக்கித் தெரிவையர்பாப் - போக்கிசைத்தா
ளன்றனோ நியடிதந்தே யாஙகோட்டு காரணமற்
றென்றுடென் றானே யிடித்து. (௨௧)

தக்கபடி பேசாத தன்மையினு லிங்கின்ற
விகருமொழி யேந்திமையார்த தள்ளுவிநதேன் - புக்கதிலும்
தன்றியுகின யககளிய றான்ப தறிந்திலன்யா
னின்றிதனை நீசமிசக வென்று. (௨௨)

ஓதி மலர்ப்பதத்தை யொண்முடிசேர்த் தானிருபன்
கோத மகலாத கோசிகனென் - கோதையரா
நீவதுவை செய்தக்கா லின்பிழையை யான்பொறுப்பேன்
காவலனே காணென்றா னால். (௨௩)

வேத முடிவுணர்ந்தோய் வேந்தர் புலைக்குலத்து
மாதர்தமை வேட்டன் மரபோவென் - றோதினன்மன்
சாவத்தாற் சண்டாள னானவன் சேய் நீயிவரை
மேவுத தருமென்றான் விண்டு. (௨௪)

அன்றுமல ரோன்மதலை யாடுகொடுஞ் சாபத்தாற்
றன்றுபுலை தீர்த்திட்ட தூயோனே - யின்றெனக்குச்
சண்டாள னாக்கத் துணிமனத்து மன்னியதென்
விண்டே விளம்பென்றான் வேந்து. (௨௫)

மூன்றுளது தானை முழுப்புலையை நீக்கினரு
ளின்றுமது செய்த வெனக்கரிதன் - றென்றுரைகேட்
டேந்தலை யாணிமுறு வேழையவரைச் சேர்கென்றான்
வாய்த்தவிறல் காதி மகன். (௨௬)

அம்மொழியு மன்னன் மறுத்திடலு மவ்விருடி
வெம்மையழ லென்ன விழிசிவந்தே - யிம்மனிடை
வெட்டிமைசெய் பஞ்சமர்க்கு வேந்ததொழும் பாதியென
விட்டனன்வெஞ் சாப மெடுத்து. (௨௭)

அன்னையன்றோ வென்னை யறச்சி றிடினுருவ
லென்னாவிலொ வாரா திருந்திலதே - யென்னகரு
காமநிதி வேண்டிடினு நல்குவனிப் பெண்டிலாயான்
கூடலனென் றனகோன் குனிந்து. (௨௮)

சொன்னமொழி தப்பாமற் றேன்று லினியெனக்கு
நன்னரவை நீயாத்து நல்கிடவா - யெனமுனி
சொற்றிடலுங் கேட்டுச் சுடாகழற்கான மன்னவர்கோன்
மற்றவகை செய்தான் மகிழ்ந்து. (௨௯)

இவ்வுலகை யாளுள யேந்தலின தாழிமுடி
தெவ்வலங்வாள சேயூரு செய்யகழ - லவ்விவிழி
மாதணியு மைந்தனை மணிப்பணியுந் தாவென்றான்
மாதவன்வள ளல்வதனம் பார்த்து. (௩௦)

அன்னவகை யெல்லா மளித்துநின்ற கோமானைப்
பின்னருமக் காதிசுதன் பேசினன்கண - டின்னவைமன்
வீடுபெறத் தந்தனைநீ மெல்லியல்சேய் சாதநுவிலை
நீடுடையை நீட்டியக லென்று. (௩௧)

ஆசையினிப் போயிரப்போ மாடையளித் தாலெனக்கோன்
கூறுனர்கொண் டாளுணர்ந்து கோசிகன்றன் - பேராயினை
மூவகையாக கிழ்த்திட்டா னேற்றான் முனியாது
தூவியிரு சங்குமகன் சூழ்ந்து. (௩௨)

தாமுந் தனிசமனுந் தையலுஞ்செங் கற்றணியை
மானங் கெடாமை மகிழ்ந்துவைத்தார் - வானுமண்ணும்
போற்றுமிறை பிற்கழித்த பொற்கலையைக் கொண்டுவைத்தா
னூற்றலற வோன்முன் பணிந்து. (௧௩)

மெய்த்தவனே நல்காய் விடையெனக்கென் றனிருபன்
குத்திரமார் நெஞ்சத்துக் கோசிகன்கேட் டிந்தினத்தே
யானறிஞர் வந்திரப்ப விட்டிச்சு நேர்ந்தபொரு
ளீநல்கி நீங்கென்றா னல். (௧௪)

எப்பொருளு நானேக ரெய்ந்தாய் நினக்களித்தே
னிப்பொழுதென் பாலியாது மில்லைமொழி - தப்புலன்யா
னென்றிரங்கி நீயவதி நல்கியெனக் காள்விட்டான்
மன்றபொரு ளீவலென்றான் மன். (௧௫)

சொற்றிறம்பு வாயாயிற் சூளுறவே தென்றினறயை
கற்றவத்தோன் கேட்டா னரேந்திரன்யான் - சொற்றவறி
னன்னியன்ற வுயிரிழையை யாதரித்தன் றுன்கடைவாய்
மன்னுமவ னுவனென்றான் மன். (௧௬)

காற்பதின்மே லெட்டியைந்த நாளையிலென் னுள்காத்தின்
பாற்பொழிவாய் பொன்னெல்லாம் பார்த்திவனே-மேற்புகன்ற
காலத்து னல்காயேற் காசுனக்காங் காணென்றான்
கோலச் சடைமுனிவர் கோன். (௧௭)

வணங்கிவிடை பெற்றநகர் மன்னவனைக் கூய்நீ
யிணங்கியெனக் கீந்தபொரு ளெல்லாங் - குணஞ்சிறந்தோ
யென்னுடனே வந்தபதி யேகொப்புத நீரென்றான்
மன்னுதவக் கௌசிகனு யன். (௧௮)

அவ்வண்ணம் யான்புரிவ லந்தணநீ போதுகென்றுச்
செவ்வண்ண நெஞ்சிறைவன் செப்பினனுற் - றெவ்வண்ண
மொவ்வனைப் புரிவசகத ரொப்பனைசெய் தாரவன்முன்
னன்னுச் சிலமுனிவர் நன்கு. (௧௯)

காவலனுங் காதலனுங் காரிகையுங் கானடந்து
மேவமத மாவிவுளி மேலேறித் - தாவதர்பின்
போதமுனஞ் சேனைசெலப் பொன்னிரத மீதிவர்ந்து
மாதவனவ் வாவி யகன்று. (௩0)

மாநகரில் வாழுநர்தம் மன்னையெதிர் கொள்ளவுற்றுத்
தேனருதா ரோதித் திருவோடுசேய் - மானவனுந்
தேர்மிசைவா ராமே திருவடிகள் சேப்பவரல்
கார்விழியாற் கண்டுருப்ப நீர். (௩௧)

வல்லை யயோத்தி வளநகரி யின்புறத்துப்
புல்லுபுதேர் விட்டிழிந்தான் பூபாலன் - சொல்லிருடி
தன்னைநக ருட்கொடுபோய்த் தன்பொருளெல் லாந்தந்தே
மின்னுமரி யாதனத்தின் மீது. (௩௨)

வீறறிருப்பச் செய்தவனை வேரிமலர்த் தாள்பரவிப்
போற்றிநின்முன் போந்த புரவலரு - நூறறுறைதேர்
மந்திரிமார் மங்கையரு மள்ளரும்பின் னவ்வறிஞன்
சுந்தரத்தா டாழ்ந்து துதித்து. (௩௩)

நிற்கின்ற தங்க ணிருபனைக்கண் டேயழுதார்
கற்கொன்ற தோளரசன் கையமைத்தீண் - டெற்கொன்று
மன்பொடுநீர் முன்செய்த வப்பரிசே யிம்முனிவற்
கின்புறுமா செய்கமுறை யின்று. (௩௪)

என்றியம்பி னான்வினவி யெல்லோரும் வள்ளலடி
நன்றிறைஞ்சி வாய்புதைத்து மெய்நடுங்கி - நின்றிறைவ
நின்னுரையை யார்மறுப்பர் நீளுலகி லென்றழுதா
ரன்னதவன் பார்த்தவச னாய். (௩௫)

இந்நகரு நாடு மிருநிதியு நீமகற்கு
முன்னளிக்க நேர்ந்தபொருண் முற்றுமியான் - மன்னிழப்பே
னென்மகளிர் தம்மைமணந் திங்கிருந்தி யென்றிறைவன்
பொன்மலர்க்கை தொட்டான் புரிந்து. (௩௬)

புல்லருந்து மேயரிமாப் பொங்குபசி யுற்றாலு
நல்லமறை கற்றுணர்ந்தோய் நானுனக்குச் - சொல்லலுமன்
வேண்டுமோ விச்சொல் விடுகவென்று வேதியன்கால்
பூண்டனன்கை யாற்கோன் புகன்று. (௪௭)

ஆயி னெனதுபொருட் காளைவிடு வேனாளைப்
போயகனீ மன்றா புறத்தின்றென் - றாயுமறைக்
கோசிகன்சொற றான்வினவிக் கோசலர்கோ னாயேன்செய்
யாசெவையு நீபொறுத்தி யால். (௪௮)

என்றுபுலஞ் செற்றோ னிணைச்சரண்மேல் வீழ்ந்திருந்தா
னன்றெழுதி நான்சமிததே னற்குணத்தோ-யென்றறவோன்
சொல்ல வெழுந்திருந்து தோன்ற லமைச்சரைக்கை
மெல்லப் பிடித்து விழைந்து. (௪௯)

காட்டியிவர் செய்யுங் கடும்பிழையு நீகருத
னீட்டுசடை யோய்நின் னடைக்கலமென் - றேட்டளக
மாதுடனே சேயை வணங்குவித்துப் போறறிவிடை
நீதருகென் றானகன்றா னேர்ந்து. (௫௰)

முப்புரிநூன் மார்பு முதுமறைதேர் நாவினொடு
துப்புறழ்நீள் வேணியுள தூயோர்க - ளெப்புடையுஞ்
சூழமுடி வேந்தர் துதைந்திறைஞ்சக் கௌசிகனு
மாழியுல காண்டா னமர்ந்து. (௫௧)

சூழ்வினைககாண்டம் முற்றிற்று. ஆ. ௩௩௯.

## நகர்நீங்கியகாண்டம்.

அப்பா லுலகனைத்து மந்தணனுக் கீந்தன்பி
னெப்பாலுஞ் சொன்னிறுத்த வேந்தலவிர் - றுப்பாரும்
வாயணங்குங் காதன் மகனு முடன்வரப்பொற்
கோயினின்றுங் கோலமறு குற்று. (௧)

கண்டவர்க ளெல்லோருங் காலமழை யாதித்தன்
கொண்டளிக்குந் தாயில் குழவியொடு - முண்டகமும்
பைங்கூழு மாகப் படர்ந்துசர யுத்துறையை
யங்கானை நீங்கி யடைந்து. (௨)

அந்நதியின் கூலத் தளிமிழற்றும் பூம்பொழில்வாய்ப்
பின்னழுது பெட்பினுற்ற மந்திரியர் - மன்னரொடு
புக்கிருந்தான் மேலைப் புணரியிடைப் போய்விழுந்தான்
செக்கதிரோன் றீமைபொறான் சேர்ந்து. (௩)

அக்காலை யாங்கணிகழ் செய்தியறி வான்முனிவன்
புக்கான் கரந்துறைந்தான் பூபதிமீண் - டெக்கால
மீங்கணைவா யென்றமன்ன னொண்ணனைப்பார்த் தண்ணலினி
யீங்கணையேன் மீண்டென் றானே. (௪)

அந்தவுரை கேட்டிளைந்தார் வேந்த ரமாத்தியர்பின்
பெந்தமிறை வாயா மிதுபொழுதவ் - வந்தணனை
வேணிபிடித் தீர்த்துவன மேவச்செய் கின்றனனீ
யேணிபுரப் பான்வருகென் றார். (௫)

மன்னன் விழையதனை மாபாவ மாமந்தோ
முன்னளித்த வாங்கன் முடிந்தாலு - மென்னுயிர்யான்
கோசிகனுக் கீந்தவள நாடினிக்கொள் ளேனென்று
பேசமுனி கேட்டெதிர்ந்தான் பேர்ந்து. (௬)

கண்டெழுந்து தாழ்ந்தரச னின்றிடலுங் காதிமகன்
கண்டவனைக் காவலநீ யெற்களித்த - மண்டலத்தை
வாங்கிலையேல் யான்வழங்க மற்றிவர்க ளின்றுரைத்த
தீங்கனைத்துஞ் செய்தையென்றான் றேர்ந்து. (௭)

இன்னாசெய் தார்க்கு மினியசெயுஞ் சால்புடையா
யுன்னை யின்றிவர்க ளோதுபிழை - முன்னேநிற்
கீந்த வரசுரிமை யானினிவாங் கேனென்றான்
வேந்தனவ னுற்றான் மெலிவு. (௮)

என்னையிவர் வைதபிழை யான்பொறுத்தேன் வேள்விக்கு
முன்னளிப்ப னென்றபொருண் முற்றுமெற்கு - மன்னவநீ
கல்குவையோ நல்காயோ வென்றுரைத்தான் மாமுனிவன்
கொல்களிற்றுக் கோனதனைக் கேட்டு. (கூ)

வாழ்வள நாடனைத்து மாதவயா னிற்கீந்த
போழ்திப் பொருளுமுடன் போனதெனுச் - சூழ்வுற்றே
னாயினுங்கோ பத்தா லளிப்பனென்ற சூள்வழுவே
னாயனையே னல்குவ னிப்பொன். (க0)

நீவிடுக வாளென்று நீத்தவன்பூந் தாள்பணிந்தா
னீவதுமுன் மாற்றிவிழி யொன்றிழந்த - தேவனைக்கூய்
வீறுதவ விச்சுவா மித்திரன்று னன்னவனை
வேறிடத்தே வைத்து விழைந்து. (கக)

ஆனையின்மே னின்றெறியு மக்கவண்கற் போமளவு
மானபொரு ணீபோ யளித்தாற்கொள் - போனநிற்கு
வேதனமும் வேந்தன்பால் வேண்டுகனி யாதிதந்தா
லோதனங்கே ளேலா துவர்த்து. (கஉ)

சொன்றிதரின் வேண்டாவென் றோன்றலிவ னூண்பெற்று
லன்றுநிதி நல்கா தகலலுணற் - கென்றுதடு
நங்கெடுவு நண்ணிற் கரிகுறித்து நின்றவரைத்
தங்கலைவா மற்றைநா டான். (கங)

மன்ன யதிக்குரைத்த மாநிதிநல் கேனென்று
னுன்னரசை வாங்கி யுதவுவனென் - னன்னதற்குச்
சம்மதித்தாற் கொண்டனைத்தி சாலுநமக் கஃதென்று
வம்மலியம் பாசகூட்டி விட்டு. (கச)

வள்ளலுக்கு நல்கிவிடை வந்தவழி மீண்டகன்றான்
வள்ளிலைவேற் சேனை மகீபனொடு - தெள்ளுமதி
மந்திரியர் தம்மையெலா மாதவன்பின் னேகமொழி
தந்துதிரி சங்குமகன் றான். (கரு)

உத்தமனீ நீப்பினுயிர் வாழலன்யா னென்றுற்ற
சத்தியகீர்த்திப்பெயரோன் றான்றொடராத - நைத்தியர்தந்
தேசிகன்முன் போதத் தெரிவைசுதன் சேர்ந்துவர
மூசிருள்போ முன்ன மெழுந்து. (௧௬)

பாதமலர் கன்றவயோத்திப் பதிகடந்து
மீதழலை வீசுசுர மேவியவட் - காதலனைத்
தோளிலமைச்சன் சுமந்தியங்கப் புன்புழுப்போற்
பாலைக் குழறுடிப்பப் பார்த்து. (௧௭)

பட்டமர மேடுசுழி பாறைவழி யெங்குமுனி
விட்டபணி தேள்குளவி வெம்பூரங் - கட்டேறவி
யீண்டி யிடர்விளைப்பத் தீவினையை நொந்தகன்று
கூண்டினனற் கோமதிப்பே ராறு. (௧௮)

என்மரபி லுற்றவிவ னின்னலினி நோக்கியிரே
னென்னுமவ னென்னவெல்லோன் போய்மறைந்தா - னன்ன
தன்னாடை நங்கைமக னண்ணனதி வண்டுறையைத் [பொழு
துன்னியற லுண்டிருந்தார் சோர்ந்து. (௧௯)

மார்க்க நடந்த வருத்தமதி மந்திரிதான்
பார்க்கலனாய்ப் பல்காய் பழங்கிழங்கு - பூக்கமழுஞ்
சோலைவனம் புக்குத் துரீஇக்கொண்டு வந்துசெய்ய
கோவிறைமுன் வைத்தான் குனிந்து. (௨௦)

கண்டெடுத்து நல்ல கனியவற்றுட் கோசலர்கோ
னுண்டருணீ யுத்தமவென் றீந்திறைஞ்ச - மண்டுசினங்
கொண்டுகவி யுண்டிவற்றைக் குக்கிவளர்க் கேன்பானெய்
வண்டயிர்சோ றல்லதென்றான் மற்று. (௨௧)

எங்களர சையமுனிக் கீந்தடவி புக்கவெமைப்
பங்கமிலான் பாலடிசி லீகேட்பி - னெங்கினிப்போய்த்
தேடிக் கொணர்ந்தளிப்பே மென்றிறைவன் சீதகன்பொற்
றாடிணைவி யோடுபணிந் தான். (௨௨)

சற்றிரங்கி வெள்ளி தருபலநீ ருண்டமர்ந்தான்
மற்றிறைசேய் மங்கையொடு மந்திரியும் - பொற்றடக்கை
யாற்கனியைக் கொண்டருந்தி யாம்பருகிப் புற்றரைப்பாய்ப்
பாற்கண் டுயின்றார் படுத்து. (௨௩)

கோசிகன்ற னாணையினாற் கொண்மூ விடித்துமின்னி
யாசுகமும் வேகமுட னோங்கெழும்பி - வீசமழை
யூற்றநனைந் தாடை யுடனடுங்கிப் பார்ககலனைப்
பாற்றினஞ்சூழ் வேற்கரத்தோன் பார்த்து. (௨௪)

மாறுவது மில்லை மழைதான் சதுமறையோ
யாறுபெரு நாமுன்ன மப்புறத்தே - சேறுமென
வீரமிலாச் சுக்கிரனீ ரோகுநகர் தோறுமுறக்
காரணமெற் றென்னென்றான் காவலன். (௨௫)

எந்நகரிற் புக்கே மிடைவனத்தை விட்டினியோர்
நன்னகரஞ் சேர்ந்தாலந் நாளடியேன் - சொன்னபொரு
ணிற்களிப்பன் வேதியனே நீவருக வென்றரசன்
சொற்கவியைத் தாழ்ந்தான் றுதித்து. (௨௬)

வஞ்சமுனி மாற்ற மதித்தெழுந்தான் சல்லியனு
மஞ்சனைத்தோள் வைத்தமைச்சன் முன்னடப்ப-வஞ்சிகர
மோர்கரத்திற் கோன்பற்றி யோர்கரத்திற் கோலூன்றி
யூர்குடிலை தன்னுளிழிந் தூற்று. (௨௭)

நீந்திக் கரையேறி யாங்கொருசார் நீள்பழுவத்
தேய்ந்திருப்பக் காதிமக னேவியபேய் - காந்துவிழிப்
பூதமுன்பின் வந்து புரிந்த கொடுமையினை
யோதமுடி யாதனந்தற் கும். (௨௮)

மாரியொடு வல்லிருளு மாய்ந்தொழியக் காலியூர்
தேரிலணைக் தான்சாயா தேவிபதி - தாரினன்மூன்
னைவருமற் றத்தலத்தை விட்டகன்று கங்கையெனுந்
துய்யநதி சார்ந்து திளைந்து. (௨௯)

பல்வளனும் பார்த்தந்தப் பாகீ ரதிதன்னிற்
சொல்விதியாற் றோய்ந்திழிந்து நீந்தியெதிர் - புல்கனமே
லேறியவ னோர்பொழிறக னெய்தினர்க ளெய்தினனற்
சீறிரவி மேனரலை சென்று. (௩0)

மாமுனிவன் மாயத்தால் வாரணமோ டெண்குகரு
மாமடங்கல் வெந்தரக்கு வந்தந்த - மாமலர்க்காத
தன்னிலிறை முன்னோர்கருப் பீதி தவவிளைத்துப்
பின்னடைந்த தஞ்குழல பேர்ந்து. (௩௧)

அன்னபொழு தாசா னரிச்சந் திரனைவிளித்
தென்னுனாகே ளின்றளவு முற்றவினை - தன்னமினி
மேலுறுவ வெண்ணிலவாம் வேந்தமுனிக் கீயேனென்
னேலரசை வாங்கியளிப் பேன். (௩௨)

இன்னதியா ளின்னுடைய விட்டளங்கண் டோதுகின்றேன்
பின்னனைவ காண்டியெனாப் பேசினனு - லன்னதுகேட்
டன்றிசைத்த சொற்றவறே னையாவென் கேளுடனே
கொன்றிடினு மென்னையென்றான் கோன். (௩௩)

காலையவ ணின்றுங் கனைகழற்காற் றார்வேந்தன்
கோலவிழி மங்கைபிறர் கூடவரக் - காலியங்கிச்
சோணமுறீஇத் தோய்ந்தகன்று காளிந்தி சேர்ந்தாடி
நீணனையார் காவமர்ந்தா னேர்ந்து (௩௪)

மாயமனக் கௌசிகப்பேர் மாதவன்வந் தானவனைக்
காயுமிபக் காவலர்கோன் கண்டெழுந்து - போயிறைஞ்சி
யாரணநூ லன்குணர்ந்த வாரியனே யீண்டடைந்த
காரண மென் னென்றான் கசிந்து. (௩௫)

காதிசுதன் பார்த்திவனைக் கண்டடவி நீகுறுகி
வேதனையான் மெய்தளர்ந்தா யென்றுநொந்தே - ணுதலிறு
லெறகளித்த நாடுநக ரில்லென் ன லான்மனைந்து
செற்குழலென் மக்களைநீ சேர், (௩௬)

வந்துனது நாட்டின் மகிழ்ந்தரசா ளென்றியம்ப
மந்தரத்தோனை மன்னன முனிவகிறகுத - தந்தபொருள்
பொய்புகன்று கொளேன புணரேலின் மகளையெற்
றொய்திடினு மென்றான் குனிந்து. (௩௭)

மற்றதனைக் கேட்டு மறைமுனிவ னெஞ்சழன்று
வெற்றிமன்னு மேல வருவ காணடி யெனச - சொற்றகன்று
சேய்க்கணின்று சீமைபல போதித்துச் சைகையிமுற
கூய்க்கவிபையச் சென்றான் குழைந்து (௩௮)

பின்னர்ப் பிருகு பெறுதனயன் வந்துறலு
மன்னமன்னுள செல்வ னமைச்சனொடு - மன்னாபிரா
னத்தலமவிட் டோர்கழைகா னங்கியங்க விசுவா
மித்திரன்கூய விட்டனன்வெந் தீ. (௩௯)

அவ்வனத்தை யங்கி யடர்ந்தெரிப்பக் கண்டிறைவ
னிவ்வழலிங் கேதெனலு மேந்தாலின் - றிவவன்னி
மன்மரபி லோருயிரை வாய்மடுத்த லாதேகா
தென்னவெள்ளி சொற்றா னெடுத்து. (௪0)

செந்தழலோன் வெய்யபசி தீரவெனை யுண்ணியர்நீ
ருய்ந்தகல்க வென்றர[illegible] னோடினன்முன் - மந்திரியென்
புல்லுடலைத் தீக்களிப்பேன் பூபதிசெய பொன்னைவிட்டுச்
செல்லவென்றான் சேவடியில் வீழ்ந்து. (௪௧)

சிதலை தினப்பட்ட வாலமர மூன்று
மதலையா மற்றதன்வீ ழன்றே - கதழனற்கு
ளென்னின்றீர் யான்சென்று வீழ்வெனா மந்திரியோ
டின்னேபோ கென்றனனற் சேய். (௪௨)

தையலந்தச் சொற்கேட்டுத் தன்மகனை மோந்துதழீஇச்
செய்யபற்கள் வீழ்ந்திலலாய் செல்வனே - தெய்யவுனக்
கித்துணிவு மிவ்வறிவு மெங்கடுத்த தென்றுமுகங்
கைத்தலத்தின் மோதிக் கலுழ்ந்து. (௪௩)

மாதருக்குக் காதலரான் மைந்தரா லிவ்வுலகி
லாதரவா மாதலினீர் நின்மினெனு - வோதுபுசென்
றெல்லையண்ட கோளத்தை யுற்றடரு மச்சேர்ந்தார்க்
கொல்லிமுன நின்றுரும்பிட் டு. (சச)

மறைநெறிநில் லாமே வருவிருந்தோம் பாமே
முறைதிறம்பி மூத்தோ ரிகழ்ந்து - பிறர்பொருளை
வெளவியய லார்மேன் மனம்வைத்தே மாயினெனைச்
செவ்வழனீ செற்றிடுக வென்று. (சரு)

பாய்ந்திடலும் பாவகன்றன் பாவை தனுதுசற்பாஞ்
சேர்ந்தவட வைத்தீத் தெறுநமையென் - றோர்ந்துளர்த்தி
லார்ப்படங்கிக் காலை யலர்கதிரைக் கண்டபணிப்
போர்ப்பெனவே போனான் மறைந்து. (சசு)

மண்டு மழுறணிய வான்வளைக்கான் முற்றுநெய்தல்
புண்டரிகம் பூத்திலஞ்சி யாய்ப்பொலியக் - கண்டுமகிழ்
தாயிழையாள் கற்பை யரசன் புகழ்ந்தணைந்தான்
றூய்வா ரணவாசி சூழ்ந்து. (சஎ)

நகர்நீங்கியகாண்டம் முற்றிற்று. ஆ ந-அகூ.

---

## காசிகாண்டம்.

---

வாரணவா சிப்பெயரின் மாநதிநீள் வண்டுறையிற்
சிருசனன் மந்திரிசேய் தேவியொடு-வீரமிகு
கோனிறங்கி மெய்ச்சுருதி கூறுமுறை யான்மூழ்கி
யீனமற வேறி யிசுந்து. (க)

திண்களிறு மாய்கின்ற செங்நெற் கதிர்மிளிருந்
தண்கழனி சூழ்காசி சார்ந்துமறைப் - பண்குலவு
நாவினர்முன் னிரிருவர் நண்ணுமணி மாடகிரை
பாவுமறு கூடேகிப் பார்த்து. (உ)

மண்ணுமணிக் கோயிலிடை வாழ்விசுவ நாதனடி
யெண்ணி யிறைஞ்சியகன் றோர்பொதியி - னண்ணியவட்
கொண்டமைச்சன் றந்தபண்டங் கோதைசமைத் தன்பினிட
வுண்டிருந்தா னாழ்வினையை யோர்ந்து. (௩

அன்றடுத்த நாளி லசுரகுரு பார்த்திறையைக்
குன்றடுத்த தோளாய் கொடுத்தியெனி - னின்றுகொடு
வட்டபுல வாழ்க்கையன்முன் னிடுபொரு ணீயென்று
கட்டுரைத்தா னெஞ்சங் கனன்று. (௪

எவ்வகையோ விப்பொருளை யின்றளிப்ப தென்றெண்ணித்
தெவ்வடுவேற் கோன்விழிநீர் சிந்திநிறபக் - கொவ்வையிதழ்ப்
பொன்கண்டு மாறறம் புகலா திறையழலென்
பன்னென்று கேட்டாள் பரிந்து. (௫)

கன்னல் புளிக்குமின்சொற் காரிகையே நீயறியாப்
பொன்னுளதோ வென்பாற புகலென்று - மன்னிசைத்தா
னன்னதனைக் கேட்டுழுவ லன்புடைய மாதரசி
யின்னமொரு நாளவதிக் கெல். (௬)

பல்லவினைந் தென்னை பதியெனையு மைந்தனையும்
வில்லளிநீ பொன்னென்றாள் வேந்தனனி - யல்லலுழந்
தெல்லிதுவா மென்ன விறைவவிடு மோநமையூழ்
சொல்லுகென்றா ணங்கை துணிந்து. (௭)

ஆயினது செய்வலெனு வண்டலர்கருச் சியமன்னன்
றேயுமிடை மானின் சிரமிசையு - நேயமகன்
சென்னி மிசையுஞ் சிறுபுதல்வைத் தேகண்டார்
மன்னிரங்க முன்னடந்தி மற்று. (௮)

முன்னை வினைமுடுகி முற்றுதலாற் றீவினையே
னென்னிளஞ்சே யில்லா ளிவர்களையின் - றிங்ககரிற் [ன
போந்துவிற்கின் றேனுண் பொருளுடையீர் கொண்மினெ
வாந்தெருவிற் சென்றா னறைந்து. (௯)

என்னை விலையிவர்கட் கென்றுமறை யோனொருவன்
முன்னணைந்து கேட்டான் முடிவேந்தன் - வன்னெடுங்கை
யானைமிசை நின்றெறியு மக்கவண்கற் போமளவுக்
கானபொரு ளென்றிசைத் தானாங்கு. (௧௦)

அந்த விருநிதியை யாரிடத்தே யீவதெனச்
சந்தமறை யோன்வினவத் தாரிறைவ - னிந்தமகன்
கையிலளிக கென்றுணர்த்தக் காபபியனுக் கன்றோனுங்
கையறைந்தா னீவலென்று காண். (௧௧)

உன்கரத்தே மாநிதிய முற்றதோ வென்றரசன்
மின்கவியைப் பார்த்துரைத்தான் வெள்ளியும்பொன் - னென்க
சேர்ந்ததுநீ திட்டுமுறிச் சீட்டுடன்சேய் மாதிவனை [ரத்தே
யீந்திடுகிவ் வந்தணற்கென் றான். (௧௨)

அந்தவகை மாநிலமன் னாற்றவடி தாழ்ந்தரிவை
யெந்தமக்கு நெஞ்சமுங்க லேந்தலினி - யெந்தநா
ணின்வதனங் காண்குவனோ நீவிடைதா வென்றகன்றாண்
மின்விழிநீர் சிந்தி மிக. (௧௩)

அங்கணமா ஞால வரும்பொறையைத் தாங்கலனாய்ப்
புங்கவன்றோள் வைநதிண்டுப் போந்தவெனக் - குங்கனைமேற்
றுங்கலெங்ஙன் கூடுமென்று தாயெனையு நீத்தனையோ
பூங்கழற்கா லையா புகல். (௧௪)

என்றுசுதன் வேந்த னெழிற்களத்தைப் பூண்டரற்றக்
கன்றுசினத் தித்தெறிப்பக் கண்டுவினாந் - தொன்றுகரம்
பற்றியிழுத தேகொடுபோய்ப் பார்ப்பான் றனதகத்தை
யுற்றனன்யாய் செல்ல வுடன். (௧௫)

அக்கொடுமை பார்த்தரச னாற்றலனாய் மூர்ச்சித்துச்
சக்கரமேன் மாழ்கிவிழத் தாங்கியுடன் - மிக்கமதி
மந்திரிதான் றேற்றலுமே மன்னவனு முட்கவலை
சிந்தி யெழுந்தான் றெளிந்து. (௧௬)

பின்மிருத சஞ்சீ வினிப்பேர் மனுப்பெற்றோன்
மன்முகத்தை நோக்கி மறைமுனிக்குச் - சொன்னபொரு
ளீந்தனைநின் பின்னுமுன்ற வென்றனக்குக கூலியினி
வேந்ததரு கென்றான் விளித்து. (௧௭)

நல்குவன்வா வென்று நவின்றமைச்சற் பார்த்தென்னை
வில்கொடுநீ பொன்னிந்த வேதியற்கென் - றோல்கவில்சீர்
வேந்துரைப்ப நாயேனை விற்றளிபொன் னென்றன்றோன்
வீழ்ந்துரைத்தான் வள்ளலடி மேல். (௧௮)

அன்னவகை செய்யி னருந்தவற்கஃ தேலாவா [தான்
மின்னினியே யென்னைவிற்றீ பொன்னென் று-மன்னிசைத்
கேட்டென்ன பாவங் கெழுமியதெற கென்றுளளி
வாட்டமுற்று மந்திரியு மன். (௧௯)

ஆலவய லோங்குபழை யாறையமர் நீதிதன்னைப்
போலுமரிச் சந்திரன்றன் பொன்முடியின் - மேலொருபுல்
வைத்தென்ன ராயினும் வள்ளலிவற் கொள்ளுமொழி
கைத்தென்றன் கைசகணளித தென்று. (௨0)

போகு மறுகுதொறும் போய்ப்பகர வோர்வீர
வாகுவெனும் பேர்ப்புலைஞன் வள்ளுரம் - வாகுவயிற்
காவினன்முன் வந்தெய்திக் காவிறக்கி வாய்புதைத்து
நீவியங்கை யாலொடுக்கி நின்று. (௨௧)

ஐயே புலைத்தொழிலை யாற்றிடுமென் போல்வார்க்கு
மெய்யேசொல் விற்கத் தகுதியுண்டே - கையீந்தா
னீகருதிக் கேட்கு நிதியமெலா மின்றென்று
தாகமொடு கேட்டான்முன் றாழ்ந்து. (௨௨)

மன்னனுடம் பாடுகொண்டு மந்திரிவிற் பேனுனக்கிங்
கென்னவிலை யேதென்றா னக்கொலைஞன் - மின்னுபதி
னாயிரம்பொன் னென்றமைச்ச னுடலுமற் றன்றோனுந்
தாயவஃ தீவலென்றான் சூழ்ந்து. (௨௩)

மந்திரிதன் பேரால் வரைந்தா வணமவர்க்குத்
தந்து பொருள்வாங்கித் தானவர்தம் - மந்திரிக்கீந்
தையநீ போய்வருக வென்றறைய வாங்குமகிழ்ந்
தையெனவே போனா னவன். (௨௪)

வாய்மை விதரணத்தின் மற்றொருவர் நேரில்லாத்
தூய்மனத்துத் தோன்ற றுணையுடையைப் - பாய்மார்க்க
ணீராட்டி யின்றோடு மெற்கிறைவ நின்பணிசெய்
போராட்சி பேர்த்ததுவோ வென்று. (௨௫)

சாற்றி யரற்றிநின்ற சத்தியகீர்த் திப்பெயரோற்
றேற்றிவிடை நல்கிச் செழுமறையா - நாறமிகு
மூனிட்ட காவை யுலம்பொருதிண் டோண்மீதிற்
றூனிட்டுத் தன்விதியை யோர்ந்து. (௨௬)

புன்றொழிற்சண் டாளவுருப் பூண்ட தறுகண்மன்
பின்றொடர்ந்து பீடில் புலைச்சேரி - துன்றியவன்
றங்குமுடை நாறுந் தனிக்குடிலைச் சார்ந்தசுமை
யங்கிறக்கி யீந்துநின்றா னால். (௨௭)

ஆங்கம் மரலி யரசனைப்பார்த் தேமகனே
பாங்கிற் பிணஞ்சுடற்குக் காப்பணமு - மோங்குகொள்ளி
யாடையுநீ வாங்கி யளித்தெனக்கு வாய்க்கரிசி
வாடலின்றி யட்டுண்டு வாழ். (௨௮)

என்றியம்பி னானாக வேந்தலரிச் சந்திரனு
நன்றெனவே வெஞ்சுடலை நண்ணியவட் - பொன்றினர்மெய்
கொண்டெரிந்த பாடைக் கொடுங்கழியாற் கொட்டிலொன்று
கண்டுபுக்குச் சொன்னபணங் கால். (௨௯)

வெய்யகொள்ளி யாடை வெறுந்துரியோ பால்வாங்கி
யையகொள்ளென் றுண்டாற் களித்ததைவாய்ப் - பெய்யரிசி
புட்டிலின்கண் வைத்துக்கட்டி முன்பிணங்கொண்டே போட்ட
கட்டிலின்கண் வீற்றிருக்குங் கால. (௩௦)

அங்கவரோ ரம்பலத்தில் யாமினியங் கித்தேதன்
மன்னவனைத் தேடி மதியமைச்சன் - றுன்னியிடு
காட்டிற் சிறுகுடிலிற் கண்டிறையை யேங்கிமனம்
வாட்டமுற்று வீழ்ந்தல மண். (௯௧)

நன்றுங்கா னல்லவாக் கண்டு நுகர்ந்தயா
மனறுங்கா லல்லற் படலாமோ - வின்றுடாய்
தோச்சித் துணைவெனத் தேற்றியவன் கைக்களித்தான்
வாய்ச்ச வரிசிதனை மற்று. (௯௨)

மற்றதனை மந்திரிமா மன்னனடி தாழ்ந்தேற்றுப்
பெறறமதற் குப்புல்லிற பெட்பினல்கிப் - பிற்றைமயக்
தோடுவிழுந் தண்டிலத்தை யுற்றெடுத்துக் குத்தியட்டுப்
போடவிறை நின்றுன் புசித்து. (௯௩)

காசிகாண்டம் முற்றிற்று. ஆ சசகூ.

---

## மயானகாண்டம்.

---

பின்னடிமை கொண்ட பிராமணனும் வன்கணனிற்
றுன்னியசேய் மாதிவருட் டோகையன்றுள - பன்னுமலை
கிட்டு மனைமெழுக னெற்குத்த லெபபணியுங்
திட்டமுறச் செய்தொழுகத் தேர்ந்து. (௧)

சோமகனுங் கோலஞ்சித் தூக்கமொழிந் தேவிடியச்
சாமமெனத் தாணெழுந்து போய்வனத்தி - லோமவிற [து
கிந்தனம்பைங் கூர்ச்சமிவை கொய்தெடுத்துக் கொண்டணைந்
தந்திடுங்கூ ழுண்டுதரித் தான். (௨)

உற்றசிறு ரோடொருநாட் போய்த்தேவ தாசனெனுங்
கொற்றவன்சேய் கானங் குறுகியவண் - வற்றுதுவர்
கட்டிச் சுமந்து திரும்பிவருங் காற்கண்டு
வட்டைக்கோர் பால்வண் குகை. (௩)

கொய்யவது தன்சுமையைக் கோளியின்கீழ் வைத்திறக்கி
யையெனப்போ யாங்குப் பறித்திடலும் - வெய்யமுனி
கற்பனையால் வந்து புதர்க்கட் கரந்துறைந்த
சர்ப்பங் கடித்தபடந் தாழ்த்து. (௪)

அக்கணமே மாய்ந்தா னலறிவெரீஇ வீழ்ந்திளைஞர்
சக்கரமார் பொற்றேர்த் தரணிகணே - துக்கமொடு
பாய்ந்தோடும் பச்சைப் பரிசெலுத்திப் போய்க்குடபான்
மாய்ந்தான் மறிகடற்குள் வீழ்ந்து. (௫)

ஈந்த மெலுவனின்ன நண்ணுமைக் கேதுவென்னென்
றந்தவடக் கிழமர்ந்த மக்களெலா - முந்தியவன்
சென்றதிசை சென்றிறந்து நிற்பப் புரட்டினர்பார்த்
தொன்றிநனி செல்ல லுளத்து. (௬)

மீண்டங்குத் தத்தம் விறகெடுத்துக் கொண்டொல்லை
மாண்டநகர் மாலையொடு புகுமகற - றேண்டிநின்ற
தாயுடனன் னுன்மடிந்த தன்மையிட னன்கறைந்து
போயினர்தம் மில்லம் புரிந்து. (௭)

ஆயிழையாள் கேட்டழுங்கி யவ்வுரையை மெய்ம்மறந்து
வாயிலிடை வீழ்ந்தெழுந்தங் குண்மருவி - யேயபுணி
யாவு மறவியற்றி யானுடைய பூசுரன்றன்
சேவடிமுன் சென்று விழுந்து. (௮)

நாகத்தான் மாண்டொழிந்தா னுன்பெற்ற வோர்குமர
னேகத்தா வாங்குவிடை யென்றழலும் - வேகத்தாற்
சீதிமறை யோனடிமை செத்தானிற கேனட்டஞ்
சேறலொழி தேமொழிநீ யென்று. (௯)

சொற்றனன்கேட் டொண்ணுதலா டோன்றலிறந் தானென்
பெற்றவயின் பேயேற் கெரியாதோ - சற்றிரங்கி [றூற
நல்குவிடை போயெடுத்து நானடக்கஞ் செய்திங்கே
யெல்வருமுன் னெய்துவனென் றுள். (௧௦)

நின்மொழிதப் பாமைநடப் பாயெனினீ யேகென்று
கன்மனனைந் தன்றோன் கழறலுமே - மின்மருங்குற்
காரிகைதன் கால்பின்னக் கார்க்குழல்கண் ணீருடனே
சோரவுள முந்தத் துனைந்து. (௧௧)

சுற்றநகர் தாண்டிமசார் சுட்டி யுரைத்தழிபோ
யுற்றலங்கை யோரிகுறற் சூழநசைப் - பெற்றமகற்
கண்டு கணையெறிமான் போலிறகி மெய்ம்மறந்து
மண்டலமேன் மாழ்கிவிழுந் தாள். (௧௨)

பின்னெழுந்து பேதை பெருங்கயற்க ணீராட்டிப்
பொன்னலர்க்கை யாலெடுத்துப் புத்திரனை - தன்னவுடைத்
தகுமடி மேல்வைத்தே சாதகம்பே யும்மிரங்கச்
செங்குமுத வாயைத் திறந்து. (௧௩)

இந்திடத்தின் மாசுணைத்தா னீகடியுண் டேயிறப்ப
முந்துவினை யாது முயன்றறியே-மைந்தாவோ
வென்னிறையு யானுமினி யாரைநம்பி வாழ்வமுரை
யென்ன வரற்றி யிசைத்து. (௧௪)

தன்னமைத்தோள் மீதிற் றனிமகனை வைத்துக்கொண்
டன்னத்தின் றாவி யனிச்சமஞ்சும் - பொன்னடிக்கட்
கன்முள் ளுறுத்தக் கணங்குறளசெந் நாயடர்ப்பப்
புன்முடைநா றீமம் புகுந்து. (௧௫)

வானவர்தங் காப்பின் மகனைவைத்தே கிக்கரிந்து
போனகுறைக் கட்டை பொறுக்கிவந்து - தானடுக்கிச்
செங்கனலை மூட்டிச் சிறுவனையக் கட்டையின்மே
லங்கெடுத்து வைத்தா ளழுது. (௧௬)

நண்டு கனல்விளக்கங் காவலவன் சார்ந்தேடி
மண்டிருளில் வந்துதனி வாய்க்கரிசி - தண்டறவே
காற்பணநல் காதே சவஞ்சுடலென் னென்றெறிந்தான்
கார்க்கொட்டாக் கண்பூவையக் காய்ந்து. (௧௭)

சேவடிமேல் வீழ்ந்து தெரியாதிவ் வூர்வழக்கம்
பாவியெனக் கேது பணம்வழங்க - தாவிலருட்
கண்ணவரா வான்மடிந்த காதலனை யான்றகனம்
பண்ணவரு மென்றுள் பதைத்து. (கஅ)

செந்திருவே கண்டெலனை யான்புலையற் கோரடிமை
தந்தமுழத் தானைபணங் காலாண்டாற் - சிந்தனிலை
நின்மகனை நீசுடுக வெற்குரிய வாய்க்கரிசி
மன்விடுவன் காணென்றான் மன். (க௯)

காசங் கிடம்புழலா ளாயினிவ னிம்மகனைப்
பாசறழ்ந்தோ னேற்றிப் படர்ந்துசுட - லேசெனவே
யென்னானு செய்குவனோ வென்றிரந்தாள் கோதைகழுத்
தொணனுணைக் கண்டான்கோ னுற்று. (௨௦)

வஞ்சி நினது வளர்மிடற்றின் மங்கலநாண்
றுஞ்சித தலகைப் பொருள்சரத்திர - சொஞ்சமுமில்
லென்றிசைத்த வேலா திதனையெனக் கீதியென்றான்
குன்றிசைக்குந் தோளான் குறித்து. (௨௧)

வர்முரசங் கேட்டசுனை மான மடப்பிமதான்
டாமிசைவீழ்ந் தேபரதந்திங் கென்கணவ - னொருவர்க்
கல்லநமற றியார்க்கு மறிவருநா ணிவ்விழிகு
னொல்லுமதோ கண்டான வூற்று. (௨௨)

இத்தலத்தே புக்கபின்னை யெம்பெருமா னார்மொழியும்
பொய்த்தனவோ மாயோன்புராரியினு - மெய்த்தவனோ
டல்லனின்றென் வாடரிய சுறபொழிவ தென்னென்று
சொலவிச சொரிந்தனள்கண் முத்து. (௨௩)

வாய்மை யதுவினவி மன்னன் மனமறுகிச்
செய்முகந்தைப் பார்த்தெங்ச் சீறியா - னாங்கடித்த
போதனையும் பூரவையும் விட்டொடி டேனைநோக்கேதன்
றேதினையன் புற்றசெல்வா வோ. (௨௪)

அன்றெனது கந்தரத்தை யார்வமொடு பூண்டழநீ
துன்றுசின வேதியன்கை தொட்டீர்ப்ப - நின்றிருந்தேன்
பாவையுனைத் தோட்கொணர்ந்து பாலகனை தீச்சுடலும்
பாவியின்று காலெறிந்தேன் பார்த்து. (௨௫)

வென்றிவடி வேற்றூதை வெட்டியாற் காட்பட்டா
னென்றுமினி யெய்திநமை மீட்கவல்லா - னென்றெணியே
வாருயிரை நீத்திட்டா யப்பாவோ வென்றரற்றிப்
பாரகத்தே வீழ்ந்தான் பதைத்து. (௨௬)

சொண்கனிவ ளூமென்று கோதைதுணிந் தேர்தலடித்
தண்கமலந் தாழ்ந்துதலை வாபுவியின் - கண்ணெவர்கருந்
தெய்வமெ வருத்ததல்லாற் சோராது வேறினிநீ
நையலற மூன்னென்றூ ணைந்து. (௨௭)

நீசனுக்கி யான்றொழும்ப னீலவிழி யாயவற்குத்
தாசபண னல்கேனேற் றுன்னுநவை - நீசடிதி
போந்துனையாள் வோற்குப புகன்றுடைபொன் வாகிவந்தெற்
கீந்துசுடுன் மைந்தனையென் றூன. (௨௮)

வன்பாணி கர்த்த மனத்தனிப்பொன் ளுடைமையை
யன்பாற கொடாது னறககொடியோன் - றுன்போவி
யிம்மகளைப் யார்த்திருதகி யேகியளித தாற்கொணர்வல்
செம்மலிவ னென்று தெரிதது. (௨௯)

தாரணிமா மன்னன் றனயனய னின்றழுங்க
நேரிழையாள் வெஞ்சுடலை நீத்தொல்லைக - காரியலும்
கன்மதில்சூழ் காசி கடிநகரி வாய்நுழைந்து
பொன்மனையார் வீதியிடைப் புக்கு. (௩௦)

ஆங்க ளுவளகத்தே யணமிச் சிலபடிறர்
பாவகி னெடுத்துப் படர்ந்துபுறங் - தூங்களவிற்
காசணிகள் கைக்கொண்டு காதி யெறிந்திட்ட
தாசியிறை கான்முளையக் கண்டு. (௩௧)

இம்மதலை யார்மதலை யென்னவல மந்துகண
மெம்மதலை தன்னை யெறிந்ததுகொ - லம்மவெனு
வாடுறறுச் சேயை வனசமலர்க் கையேந்தி
நாடுற்றான் மெய்க்குறியை நன்கு. (௬௨)

விடிந்திடுமு னவ்வூர் விறற்கா வலர்க
ளிடிந்தமதி லேறி யிழிந்தாங்- கடைந்திறைவன்
செததமக வோடு தெரிவைதனைக் கணனுற்று
மொத்துபுகை யார்த்து முனிந்து. (௬௩)

மண்டபத்தில் வீற்றிருக்கு மாமகுட மன்னவன்முன்
கொண்டுவிட்டுக் கும்பிட்டுக் கொற்றவனே - கண்டிரவுன்
மைந்தனையிம் மாது மறுகெடுத்துக கொண்டிருககத்
தந்தனமீண் டென்றிசைத்தார் தாழ்ந்து. (௬௪)

அந்தமொழி கேட்டரச னங்கை யமைத்தவளை
வந்தபடி யாவுமுறை வல்லியெனச் - சந்த்ரமதிப்
போததெரிவை தாளைப் பெருமலர்க்க ணீரருவி
வார்ததலம்ப நின்றிறைஞ்சி மறறு. (௬௫)

என்று நரளை யெடுத்தருந்து மோரரக்கி
வென்றிவடி வேலிறைவ நின்னகர்வந் - தின்றிரவிற்
றினறிடயா னின்மகனைத் தேர்ந்து புறஙகொடுபோய்க்
கொன்றனன்கா ணென்றுள் குழைந்து. (௬௬)

இன்னற் கடல்கடப்பா னேந்திழையா ளோர்ந்துளத்துச்
சொன்னமொழி கேட்டுத் துணைவ ளைப்பாராத - தந்நிருபன்
செய்ய முகத்திவளே செல்வனைக்கொன் றாளென்று
மையமெனக் கிலலென்றா ராய்ந்து. (௬௭)

அந்த நிலைக்க ணரிவைகரம் யாத்தீர்த்து
வந்தவர்கண் மன்று மகனையெடுத் - தந்தடிப்பின்
சென்றிக் கொடியள் செகுப்பக்கண் டர்த்தணைக்தே
மின்றுயிர்சாம் விட்டிடினென் றார். (௬௮)

சொன்னவடி தானிச் சுரிகுழலா டன்னடியோ
பின்னை யெவரடியோ பேர்ந்தோடி - யிங்கொடிக்க
ணோக்கி யிணைதிரொறு கோன்கழற்காற் காசியர்கோன்
போக்கினன்சில் லோரைப் புகன்று. (௩௯)

போற்றி யிறையடியைப் போந்தவர்க ளங்கெறிக்கண்
மாற்றி மறைமுனிவன் றீட்டிவைத்த - கோற்றொடியா
டன்னடியே கண்டோடித் தாழ்ந்திவள்கால் வைப்பல்லான்
மன்னவிலை மற்றடியென் றார். (௪௰)

சொல்லுதிநீ யுண்மையெனத் தோகைமுகந் தானோக்கிக்
கல்லுறழ்தோள் வேந்தன் கழறவிளை - யல்லதிலை
கள்ளி யெனவறைந்தாள் காவலன்கே ளாவியந்தே
யுள்ளங் கசிந்தா னுற. (௪௧)

அந்நிலையிற் கங்கு லருந்தவன்செய் மாயமொடு
மன்னரிச் சந்திரன்றன் வல்வினையு - மன்னிரிய
மங்கையின்னைக் கட்டுடனே வாரிசத்தின் கட்டவிழச்
செங்கதிரோன் வந்தனன்கீழ்த் திக்கு. (௪௨)

புத்திரனை யந்தப் புரங்கொடுபோ மாறிசைத்து
முந்தை விதிப்பயனை முன்னிமுன்னி - மெத்தநொந்து
மாசிலாக் கற்புடைய மானைவதை செய்விப்பான்
காசிபதி யெய்ந்து கருத்து. (௪௩)

தூதுவரைக் கொண்டழைத்துத் தொல்வீர வாகுவெனுங்
காதகனைக் கண்டிந்தக் கள்ளிதனைக் - காதகநீ
கட்டுடனே கொண்டேகி சாய்களத்தி லின்றென்று
கட்டளைசெய் திட்டான் கவன்று. (௪௪)

கோள்வீர வாகுக் கொலைஞன் குரிசிலிணைத்
தாள்வீழ்ந்து போற்றித் தளரணங்கைத் - தோள்வீக்குந்
திண்கயிற்றாற் பற்றித் திரும்பிப் புலைச்சேரிக்
கொண்குடிசை தன்னையடைந் துற்று. (௪௫)

நன்றெரும்ப ஞானவரிச் சந்திரற்கூய் மன்மகனைக்
கொன்றவிந்தக் காளியைநீ கொணடேகி - யின்றெறிக
வென்ன விளம்பிடியோ டேந்தா னவன்கரத்தே
மின்னுதன்கை வாளை விதித்து. (௪௬)

வாளுடனே மாதை மலர்க்கரத்திற் கொண்டிறைவேய்த்
தோளியைத்தான் பார்த்தழுதுகத்தோகைகண்டு-வேளையா
யென்பொருட்டு நீயிறக்க லென்றான்கோன் பின்றொடர்ந்தா
னன்பமைச்சன் வந்திறைஞ்சி யாங்கு. (௪௭)

பின்னர்த் திரண்டு சனங்கள்பல பேசிவரக்
கன்னிகைதோள் யாத்த கயிறுபற்றி - மன்னவர்கோன்
வன்னமணித் தோரணநீள் வாயிகந்து வந்திறுத்தான்
பொன்னகரி னெச்சிப் புறத்து. (௪௮)

வண்டமர்தார் வள்ளலுக்கு வஞ்சமனக் கௌசிகன்றான்
கண்ட விடர்முடிவு காணபதற்கன் - றண்டரொடு
வாசவனை நாரதனை மாவசிட்டன் கூட்டிக்கொண
டாசினிக்கண வந்துறைந்தா னால். (௪௯)

வந்துவிசுவாமித் திரமுனிவன் மன்னனெதிர்
நந்திலன்யா னுடனைக்கென் றேசாற்றி - யுய்ந்தரசு
மீவ்வுயிரு நீபெறுக வென்னவவன் றான்பரவி
கவ்விவிழி யோடரச னோந்து. (௫௦)

ஒழுக்க முடையாரிங் கூற்றுக்கோ லன்ன
விழுக்க லுடையார்க் கிசைப்ப - வழுக்கியுந்தம்
வாயிறைந் தீய வழங்குபவோ பொய்யெம்ப
தீயெமர்க்குச் சொலலுவதென் னோர்ந்து. (௫௧)

செய்மையுடன் சேறலினு னற்றனைவ னெவ்வொளிக்கும்
போயொழியா வெவ்விருளைப் போக்குதலாற - பாயவொளி
செம்பொருளைக் காட்டுதலாற் றேசிகன்மெய் யாலுஞ்சொன்
னம்பி யதனைவிடே னாம். (௫௨)

நில்லாத யாக்கையையு நீளரசின் வாழ்வினையு
மெல்லா நிலையினவென் றெண்ணியிசைக் - கொல்லாத
வெய்ய நரகத்தே வீழ்விக்கும் பாவத்தைச்
செய்யத் துணியலம்யாந் தேர். (௫௩)

என்ன முகம்புலர்ந்து மாய்ந்திருடி யேகினன்கூ
யன்னவனை மானீ யறைந்ததிற - மிந்நிலைக்கட்
கண்டகல்க வென்றனாப்பக் காதிமக னணுமுட
னண்டியவ னோடமர்ந்தா னங்கு. (௫௪)

பேதைகைந்நாண் பற்றிப் பிணஞ்சுடுகோ லாற்றள்ளித்
தாதவிழ்தார்க் கோசலர்கோன் றன்னிறந்த - காதலனண்
ணத்தலமுற் றுன்றெய்வ மன்பிணிணைந் தேத்தியிரு
நெய்த்தகுழல் பூர்வமுக நின்று. (௫௫)

என்றறையத் தெய்வந் தொழாஅ ளிதயத்தி
னன்றுபராய் நாயகனை நன்னுலதா - னின்றெளியே
னுவியிறப் பஞ்சி யறம்வழுவல் வாழியெனக்
காவலனைத் தேற்றிநின்றாள் கண்டு. (௫௬)

நின்மலனாய்ப் பூரணனாய் நித்தியனாஞ் சிற்பரனாற்
பன்மறையின் பல்லறந்துண் மிக்கவுண்மை - நன்னெறிக்க
ணின்றனனே னுண்டே னிறையிவண்மாட் டீறின்மை
யொன்றுகென வீசினனாள் வாள். (௫௭)

மாசடையா நெஞ்சத்து மன்னன் கரத்தெடுத்து
வீசியவவ் வெள்ளயில்வாள் வீழ்ந்தன்று - மூசரிக்கு
நற்பிரசம் வாக்கு நறுமலர்த்தார் போலவசையாக்
கற்புடைய நங்கை களத்து. (௫௮)

---

மயானகாண்டம் முற்றிற்று. ஆ. ௪௭௭.

---

# மீட்சிக்காண்டம்.

அங்கண் விசும்பி னடலரவ முண்டுமிழுந்
திங்களெனத் தேவி திகழ்ந்தனளாற் - றுங்கமுனி
மாயப் பெருநெருப்பின் மன்னினன்மா மன்னவர்கோன்
றூயொளிய பொன்னிற் சுடர்ந்து. (௧)

வானிந் திரன்முன்னோ ரோடு மறைவசிட்ட
னானந்த மாடி யவனியுற்றான் - கோனின்று
நன்மையுற்றா னென்னினொ நக்கியம்பி யாடினனாங்
கன்மனத்துக் கௌசிகனுங் கண்டு. (௨)

மாயவன்முற் றேவர்களு மன்னு கணத்தவருங்
காயுமிப மாமுசனுங் காங்கெயனும் - பாயபுடை
கண்ணமலை மா துடனே நம்பனரு வெள்விடைமே
லண்ணலெதிர் வந்தா னமர்ந்து. (௩)

கண்டுவிழி நீர்பொழியக் காவலர்கோன் றேவியுட
னண்டர் பிரானை யணங்குடனே - தண்டெனமண் [ளத்
வீழ்ந்திறைஞ்சி யேததியன்பின் வெவ்விடர்தீர் நதின்பவெள்
தாழ்ந்தவச னாய்நின்றா னாங்கு. (௪)

அப்பூதி நற்புதல்வ னன்றெழுந்த வாறேபோற்
றப்போதா வள்ளலரிச் சந்திரன்சேய் - துப்போதி
லீசயிறகை யேள்விளிப்ப வீழ்ந்தெழுந்து தாள்பணிந்தான்
காசியர்கோன் மைந்தனொடு கண்டு. (௫)

பால னுயிர்த்தெழுதல் பார்த்தங் கயோத்தியர்மன்
பாலிகழுந் திங்குதலைப் பாவையன்னாள் - சாலிவயல்
சூழ்ந்திலங்குங் காசிபதி சூழ்ச்சித் துணைவனன்பாற்
றாழ்ந்திசைத்தார் சங்கரனற் றாள். (௬)

ஆயபொழு தெம்மா னழைத்தமுனி கௌசிகனை
நீயிறைவற் கூறு நிகழ்த்துவகை - யேயதிற
னீங்கிலையா ரெல்லா மினிதுணர வின்றெடுத்துப்
பன்னுகெனா வாய்மலர்ந்தான் பார்த்து. (௭)

கோசிகனெஞ் சுட்கிக் குறுமதியச் செஞ்சடையான்
வாசமலர்த் தாள்வணங்கி வாழ்த்திநின்று - வாசவன்முன்
மாவசிட்டன் வாய்மொழிகருத் தான்மாறாச் சொற்றமுதல்
யாவையுஞ்சொற் றனங் கெடுத்து. (௮)

பின்னமலன் பேதாய் பெரிதிழைத்துந் தீங்கிறைக்கு
நின்னெனமுற் றுயிலேயே நீமனத்து-ளுன்னிநனி
வென்றியையார் தோல்வியையார் மேயினர்க ளீண்டொக்க
வென்றியம்ப வெய்தியகத் தீடு. (௯)

விச்சுவா மித்திரப்பேர் மேயமுனி வீழ்ந்திறைஞ்சி
நச்சுவாய்ப் பாம்பணிந்த நாயகனே - பிச்சனே
னண்ணலரிச் சந்திரன்ற னுசில் குணஞ்செயலை
யெண்ணியறி யாதிகழ்ந்தே னேற்று. (௧௦)

வேத முணர்வசிட்டன் வென்றவன்யான் றோற்றவனென்
மாதவத்திற் பாதி மகிழ்ந்தரசற் - கீதலுட
னன்றவனெற் கீந்த வரசுரிமை யாவுமவற
கின்றளித்தல் செய்தனனென் றான். (௧௧)

காய்ச்சியபொன் னணியிலேனக் கன்னத்தி விட்டாங்குப்
பேச்சதனைக் கேட்டுப் பெரிதுருகி - மாச்சுருபபார்
தாரதிப னெற்றேர்க்குத் தந்ததுபின் வாங்கிவிழை
றாரளற்றி லந்தணவென் றான். (௧௨)

பார்த்திவகேள் யானே படர்ந்தபடர்ந் தாங்குதவுஞ்
சீர்த்தவமே விட்டுன் செழுநலத்தைக் - காத்தமர்வேன்
மான்வசிட்ட னேநகைத்த வஞ்சினைத்தா னுன்முறைமை
யான்மதித்துச் சோதித்தே னீண்டு. (௧௩)

ஆளுகநின் னுடன் றருந்தவத்தோன் சொற்றனுங்கோ
ளுளியிருந் காயீமங் காத்திருந்தேன் - காளையொடு
மாதைமறை யோருவிற்று மாநிலமெய் யாளுமா
வீதியளறு நீயாள்கென் றான். (௧௪)

அந்தவுரை கேட்டனுகி யங்கியான் முன்பிறைஞ்சி
மைந்தனையு மங்கையையு மொருவிற்ற - னிந்தனையோ
காவலவன் னோர்பொருட்டுக் காசினித்தே வாய்க்கொண்ட
வாவணமீ தென்றிட்டா னாங்கு. (௧௫)

சாலனுமக் காலமலன் காலணைந்து தாழ்ந்தேத்திக்
கோலமுடி வேந்தைக குறித்திவணீ - சிலமிலா
நீசனுக்கா ளாவையென்று நீசறாய்த் தோன்றியுனை
யாசறக்கொண் டேன்முறியீ தாம். (௧௬)

நீயிருந்து காத்த நெடியசுடு காடனைத்தும்
பாயமகச் சாலையே பாவொன்ன - வீயுடலைத்
தீக்குமிடஞ் சொன்ன திறந்திகழக கண்டடைந்தான்
வீகருகழற காலோன் வியப்பு. (௧௭)

செம்மலைக்கண் டன்பாற் றிகழுமயோத் திப்பதிசேர்ந்
திம்முனிவ னோர்தவமு மேற்றாண்டு - செம்மைமுடி
தாங்கி யெமதுபதஞ் சார்கவந்தத் தென்றிறைபின்
பாங்கின் வலாரிமுகம் பார்த்து. (௧௮)

நீயு முனிவரரு நீள்கா சியர்பதியும்
வாயிலயோத் திப்பதியிம் மன்னனுடன் - போயிவற்கு
மாமகுடஞ் சூட்டி மகிழ்ந்துறையுள் சேர்கவெனு
வாய்மலர்ந்து போனான் மறைந்து. (௧௯)

சொற்றபணி தாழ்ந்து சுடர்முடிக்கட் கொண்டுநின்றார்
கற்றடிவேற் கைம்மகவான் முன்னோர்கண் - மற்றைக்
கடவுளர்தஞ் சார்பு கலந்தனர்போ யந்தச்
சுடலை யகன்று துனைநது. (௨௦)

கூர்த்தவிரு ணீங்குதலுங் கோபதிமா யோகியர்சொல்
வார்த்தை மறுப்பஞ்சிக் காசியர்மன் - னோர்த்தகொடித்
தேரிவர்ந்து கோசலர்கோன் றேவிசுத னோடமைச்சன்
சாரவவர் தாமுமுட னார்ந்து. (௨௧)

காசிபதி சேனை கருங்கடல்போன் முன்னடப்பத்
தூசிகுடை யாதபத்தாந் துன்பமற - மூசியெழ
வார்முரச மார்ப்ப வளநகரை நீத்தணைந்தான்
வாரணவா சிக்கரையின் வாய். (௨௨)

அந்நதிநீ ராடி யகன்றங் கனைவருடன்
றென்ன யமுனை சிவணியதி - னென்னருந
மூழ்கித் தணந்து முதிர்பவத்தின் மூலத்தைப்
போழ்கங் கையையடுத்தான் போந்து. (௨௩)

சேர்ந்து விதியுளியத் தீர்த்தத்திற் றோய்ந்திறைவன்
றீர்ந்திந் திரன்முதலோ ரோடுதில்லம் - வார்ந்தகிரி
மண்டு தடம்பலவு மற்றிகந்து கோமதியின்
வண்ட லிடையிறுத்தான் வந்து. (௨௪)

கூட்டிக் கொடுபெதியைக் கோவணனுங் குற்றதிறங்
கேட்டுவகை பூத்துக் கிளர்கடறபா - லோட்டாநதி
போலவையர் தானை புரசனங்கள போந்திறையைக்
காலிறைஞ்சி வீழ்ந்துநின்றார் கண்டு. (௨௫)

பொன்னகர்க்கோ றதியரும் போதவிரு சேனையுட
னந்தவிட் டேகி யயோத்திநகர் - மன்னவன்பொற்
கோயில் குறுகிக் கொடித்தேரிழிந்துபுக்கான்
பாயமணி மண்டபத்தின் பால். (௨௬)

வாய்மையரிச் சந்திரனை மாமகுட மைந்தவித்தோர்
வாய்மலர்ந்து வாழ்த்தெடுப்ப வாசவன்றன் - சேயமலர்க்
கையெடுத்துச் சூட்டிக் கனாந்தாசி போய்ப்புகுந்தா
னையவம ராவதிக்க ணங்கு. (௨௭)

ஆசியுரைத் தந்தணரு மாங்ககலக் காதிமகன்
கோசலர்கோ மானே கொடுத்தனன்கொண் - மாசிலுனக்
கென்றவத்திற் பாதி யெனவுதக மங்கையெடுத்
தன்றெவருங் காண வளித்து. (௨௮)

யானறியா துன்னை யிகழ்ந்தவெலா நீபொறுப்பாய்
மோன வெனுஅ முனிவசிட்டற் - கானுவுரை
சொற்றிறையைத் தேற்றிமகன் றேரைகையொடு மந்திரியை
யுற்றனன்கான் வாழ்த்தி யுவந்து. (உக)

மின்னு மணிக்கவரி வீசவரிச் சந்திரன்பின்
பொன்னணேயேல் வீற்றிருப்பப் பூமகன்சேய்-தன்னைமற
மந்தணர்க்கு மாமோ வெனப்பரவிக கேட்டனனுற்
கொந்தவிழ்தார்க் காசியர்தங் கோன். (ஙo)

தோய நிலத்தியல்பாந் தொல்குணமே கௌசிகனுக்
காயதெனு மாவசிட்ட னுங்கறைய - நீயெனககோ
தன்னுன் வரலாறென் னணலடி தாழ்ந்துரைப்பச்
சொன்னுன் முனிவனிது சூழ்ந்து. (ஙக)

மீட்சிக்காணடம முற்றிற்று. ஆ ருoஅ.

---

## உத்தரகாண்டம்.

---

கன்னல் வயலுடுத்த காசிபதி நீகேட்டி
பொன்னலர்வாழ் வோன்மரபிற போர்தருசன் - றன்னெழு
மைந்தன் குசற்குக் கிரிவிரிச மாநாடு [வாய்
தந்துகுச நாபற்குத் தான். (க)

செங்நெலுயர் கௌசாம்பித் தேயம் வசுர்த்தனுக்குத்
தன்னிகரில் வாரணமுந் தார்வசுவுக் - கன்னமமர்ந்
தார்வனசம் பொய்கைக் கலரும் வசுமதியு
மார்வமுட னேயளித்தா னுல். (உ)

அங்கவரிற் கௌசாம்பி யான்குசநா பற்குதித்த
மங்கையர்தா நூற்றுவரோர் வாசமலர்ப் - பொங்கரகத்
தாடச் சமீரணன்கண் டாயிழையீ ரெற்குநலங்
கூடிக கொடுதிரென்ருன் கூர்ந்து. (ங)

எங்கள் பிதாவறிய வெம்மை மணம்புரிந்தா
லங்குனைச்சோ வோமென் றவரியம்பப - பொங்குசினங்
கொண்டு முதுகொடியக கோதையரை யோதிநனி
மண்டனிலவீழ் விததகன்றான் வாயு. (௪)

வாளிகழுங் கண்ணார் மலையடைந்தின் றேற்குரைப்ப
மீளியினைந் தியார்க்குமது விள்ளாது - சூளியென்போன்
பெற்ற பிரமதத்தப் பேர்மகறருப் பேதையரை
நற்றமுறத் தந்தா னயந்து. (௫)

பின்னர்க குசநாபன் பேணிப் புரிமகத்தே
நன்னரெழிற் காதியெனு நாமனுறறு - னன்னவற்கு
நவ்விவிழிக கௌசிகப்பேர் நந்தனிக்குப் பின்னுதித்தான்
றெவ்விருக்குங் கௌசிகனுஞ் சேய். (௬)

தேசிருசி கத்தவனைச் சேர்ந்தவன்வெஞ் சாபத்தாற்
கோசிகைதான் கோமதிப்பே றாறுனள் - கோசிகனும்
வேந்த னொருஞான்று வேட்டைசெய வோர்விபினஞ்
சேர்ந்துழைபின் னோடித திரிந்து. (௭)

தானையொடு சோர்ந்து தவஞ்செய் யிடம்புகுத
யானிரங்கி வெம்பசியை யன்னவற்குந் - தேனுவினாற்
றீர்ததபின்ன ரிச்காம தேனுவைததா வெற்கென்று
பார்த்தறைந்தான் வீழ்ந்தென்பதத்து. (௮)

யானுரிய னல்லே னிதற்கெனலுஞ் சேனையொடு
கோனந்தக் கோவை வளைந்துவடத் - தானிமிழ்ப்பா
னைகுதலுஞ் சிறி யிகுத்துப் படையனைத்து
நாகமிலைச யுறறதவ்வா னன்கு. (௯)

அங்கரசன் மைந்தரெண தாவி கொளக்கருதிப்
புங்கமழை போந்து பொழிந்தனர்யான் - வெங்கனலி
சிநதவிழித் தேநோக்கச் செத்தொழிந்தார் நூற்றுவருஞ்
சிந்தைகொதித் தேந்த றெரிந்து. (௧௦)

மேவிக் கொடும்படைகள் விட்டனனென் மீதுகண்டு
தாவியெழுந்த் தண்டத்தை நாட்டினன்யான்-றூவுசர
மாதிச் சுதனமெலா மாங்கதுதா னுங்கிடலு
மேதிவனை வெல்வதியா மென்று. (கக)

மீண்டு தனதுபதி விட்டனைத்தங் கீழ்பாலின்
பீண்டுந் தவத்தை யியற்றிடலுந் - தூணடசனிச்
செங்கரத்த னேவுந் திலோத்தமையாற் றீர்ந்துதவ
மங்கவனைப் பின்புசபித் தாய்ந்து. (கஉ)

தென்றிசையி னேகிச் சிவன்சே வடிபடர்ந்து
நன்று தவமுஞற்ற நாதனையுணர்ந் - தன்றவற்கு
வேண்டும் வரமளிப்ப வீறினனந் நாட்பிருது
மாண்ட மதலைதிரி சங்கு. (கங)

மெய்யுடனே விண்புகுதல் வேண்டுமெரு ளென்றனும்யா
னையவஃ தொல்லா தெனவறையத் - துய்யவனோ
வெய்துவனென் னெண்ணத்தை யின்னே யடைந்துபிற
செய்தவர்பா லென்றுன் றிரிந்து. (கச)

இன்று துறைத்தமையா னீபுலைய றுகெனயான்
சொன்னேன் புலையனுய்த் துன்பெய்தி - யென்றேடு
மாறுற்று நிற்குமந்த மாதவனைக் கண்டுரைப்ப
வீறும் விமானம் விளித்து. (கரு)

கள்ளவிழ்தார்க் காவலனே யேறிதன்மே லென்னவிறை
பொள்ளெனவே திப்புகலும் பொன்றுடு - தள்ளினரால்
வானவர்கள் வீழுமவன் மாமுனிவற் கோலமிட
மீனுலகில் வேந்தைவைத்தான் வேர்த்து. (கசு)

என்றேடு டெதிர்த்தவ் விருடி யெடுத்தவெலாங்
கொன்னே யழிந்திடலாற் கோசலர்தம்-மன்னிவன்பா
லின்றிழைத்தும் வெவ்விடர்க ளெய்திலனுல் வென்றியெனு
மன்றவிசைத் தான்வசிட்டன் மற்று. (கஎ)

மற்றதனைக் கேட்டெழுந்து வாரணவா சிக்கிறைவன்
செற்றபுல வேந்தர் திறமனைத்து - நற்றவனீ
யல்ல தவனிமிசை யாரறிய வல்லரென்றுச்
சொல்லிப் பணிந்தான் றுதித்து. (கஅ)

திங்களுறைந் தாங்குத் திகழ்கா சியரதிபன்
றுங்க வசிட்டற் றொழுதுகொண்டு - மங்குலுற
ழங்கையரிச் சந்திரனை யன்பிற் றழீஇவிடையூர்
பொங்குபடை யோடணைந்தான் போய. (ககூ)

வள்ள லயோத்தியிற்பின் மாமடங்க லாசனமேல்
வெள்ளொளிமுத் தின்கவிகை மின்னவமர்ந் - தள்ளிலவேற்
கையரசர் மந்திரியர் காலிறைஞ்சிப் போற்றமுறை
செய்திருந்தா னின்பந் திளைத்து. (உ0)

## வாழ்த்து.

வேதஞ் சிறக்கமனு நீதி விளங்கவிப்பா
ராதங்க மாறவிசும் பாஞ்சொரிக - வோதுஞ்சொற்
றூமவரிச் சந்திரன்ற னற்சரிதங் கற்குநருந்
தாமமர்க வோங்கித் தழைத்து. (உக)

உத்தரகாண்டம் முற்றிற்று. ஆ ருஉகூ.

---

## அரிச்சந்திரவெண்பா முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.